# ...ரத மண...

5 SEP 1944
MADRAS

மாலை 12 | AUGUST 1944 : தாரண ஆவணி | முத்து 2

## பொருளடக்கம்

1. அன்னையும் பிதாவும் ... வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல்.
2. பெரியாழ்வாரும் குழந்தைக் கண்ணனும் பி. ஸ்ரீ.
3. சுசீந்திரம் ... 'சூடாமணி'
4. ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள் ... ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.
5. "தன் குற்றமறிதல்" ... டி. எஸ். ராமாநுஜம், எம்.ஏ., எல். எல். பி. (லண்டன்)
6. பாரத நாடு ... எல். ஆர். விசுவநாதன்
7. ஹரிகதை ... ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி பி.ஏ., பி.எல்.
8. திருமாலை மாண்புறல் ... டி. பி. நவநீதகிருஷ்ணன், எம்.ஏ., அண்ணாமலைநகர்
9. வினையும் பயிர் ... டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம்.
10. தேசீ...டும் தாய்மொழியைப் ...லும் ... அகளன்
11. மாத நிகழ்ச்சிக் குறிப்புகள் ...
12. அனாதைக் குழந்தை ... பேரன்

"பாரத மணி"யில் வெளியாகும் கட...
கற்பனைப் பெயர்கள்; ஒருவரை...




சோப் பாக் செய்பவர் சொல்லுகிறார் . .

"அழுக்கடைந்த வஸ்திரங்களை சுலபமாக வெளுப்பதற்கு "சுய
மாக வெளுக்கும் நுரை" உதவுகிறது. எனக்கும் என்னுடன் வேலை
செய்வோருக்கும் ஸன்லைட் சோப்பை உபயோகப் படுத்துவதா
இது நன்ருகத் தெரியும். ஆடைகளில் இருக்கும் அழுக்கைத்
தானகவே போக்கக்கூடிய சக்திக்கு "சுயமாக வெளுக்கும் நுரை"
என்று பெயர். ஸன்லைட் சோபபின் நுரை வெளுக்கும் வேலையை
சிரமமின்றி செய்கிறது. நமது சோப் செய்யும் ரசாயன சாஸ்திரிகள்
அதில் 'சுய சக்தி' வாய்ந்த நுரை நிறைய இருப்பதால் அவ்வாறு
சாத்தியமாகிற தெனகிருர்கள். 'சுய சக்தி' வாய்ந்த சோப்
அழுக்கைத் தொட்ட உடன் போக்கிவிடுகிறது."




மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 | தனிப்பிரதி அணா 4

மாலை 12 | AUGUST 1944 : தாரணஆ ஆவணிமீ | முத்து 2


## பொருளடக்கம்


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| அன்னையும் பிதாவும் | ... | வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல். ... | 41 |
| பெரியாழ்வாரும் குழந்தைக் கண்ணனும் | | பி. ஸ்ரீ. ... | 43 |
| சுசீந்திரம் | ... | 'சூடாமணி' ... | 45 |
| ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள் | ... | ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல். ... | 46 |
| "தன் குற்றமறிதல்" | ... | டி. எஸ். ராமானுஜம், எம்.ஏ., எல். எல். பி. (லண்டன்) ... | 49 |
| பாரத நாடு | ... | எல். ஆர். விசுவநாதன் ... | 57 |
| ஹரிகதை | ... | ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி பி.ஏ., பி.எல். | 58 |
| நீர்மாலை மாண்புறல் | ... | டி. பி. நவநீதகிருஷ்ணன், எம்.ஏ., அண்ணாமலைநகர் ... | 62 |
| விளையும் பயிர் | ... | டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ. எல். ஐ. எம். ... | 67 |
| தேவி வழிபாடும் தாய்மொழியைப் பேணுதலும் | ... | அகளன் ... | 76 |
| மாத நிகழ்ச்சிக் குறிப்புகள் | ... | ... | 82 |
| அனாதைக் குழந்தை | ... | பேரன் ... | [illegible] |


"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# அது ஒரு காலம்!



நாலைந்து வருஷங்களுக்குமுன்பு தான், நீங்கள் எந்த ஸ்டேஷனுக்கும் சுலபமாகவும் அதிகச் செலவில்லாமலும் போகமுடியும். இப்பொழுது பிரயாணச் செலவு ஒன்றுக்கு நாலாகிவிட்டது. தாமதமின்றி டிக்கட்பெறும் காலமும் ஒன்று இருந்தது. இப்பொழுதோ அரைமணி நேரத்துக்கு மேலாக க்யூ நின்று டிக்கட்டு பெறவேண்டியிருக்கிறது; சார்ஜும் அதிகமாகி விட்டது. ஒரு அணாவுக்கோ அரை அணாவுக்கோ உங்களுக்கு வேண்டிய வேலைகளைச் செய்ய கூலிகள் தயாராக நின்றிருந்த காலமும் இருந்தது. இப்பொழுது அகப்படுவதே கஷ்டம். உங்களிஷ்டப்படியே வண்டியும், வண்டியில் உட்காரும் இடமும் சுலபமாகப்பெறும் காலமும் இருந்தது. இன்று வண்டியில் நுழைய முடிந்தாலே அதிர்ஷ்டம்தான். பல தடவைகளில் ரயிலைப்பிடிக்க முடியாமலே போய்விடுகிறது. உள் நுழைய முடிந்தாலும், பல மணி நேரம் நிற்கவேண்டியும் நேரிடுகிறது. இந்த கலாட்டாவில் உங்கள் சாமான்களை இழக்க நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன், உங்கள் குடும்பத்தாரிடமிருந்தே பிரிந்து விடும்படி நேரிட்டாலும் நேரிடலாம். உங்கள் பெண்களுக்கு, மக்களுக்கு பிரயாணம் இன்று முன்போல சௌகரியமானதல்ல.

புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்யுங்கள். சௌகரியமான காலம் வரும்வரை நீங்களும் உங்கள் குடும்பமும் ரயில்வே போக்குவரத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

# பிரயாணத்தைக் குறையுங்கள்

578 TM

# இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு : : மதராஸ்

❋

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மவுண்டு ரோடு
மயிலாப்பூர் தியாகராய நகர் புரசவாக்கம்

❋

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிரான்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

| | | |
|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் (30-6-44-ல்) | ரூ. | 33,32,951 |
| ரிஸர்வ் நிதி | ரூ. | 32,00,000 |
| டிபாஸிட்டுகள் (30-6-44-ல்) | ரூ. | 9,48,49,465 |

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விவரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்,

N. P. B.

# ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி
லிமிடேட்.

**மிக்க முன்னேற்றமடையும் லைப் ஆபீஸ்**

**இதில் இன்ஷ்யூர் செய்யுங்கள்**

**1943 டிஸம்பர் 31-ந்தேதி முடிய வருடத்தின்
புதிய பாலிசிகள் ரூ. 5 கோடிக்கதிகம்**

| | | |
|---|---|---|
| ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி | ....ரூ. | 5,39,00,000 |
| அமுலிலுள்ள மொத்த வியாபாரம் | ....ரூ. | 24,82,00,000 |

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

**ஏஜண்டுகள் தேவை**

விபரங்களுக்கு எழுதவும் :—

மதராஸ் பிராஞ்சு :

**ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி,
லிமிடெட்.,**

107, அரண்மனைக்காரத் தெரு,

ஜி. டி. மதராஸ்.

# அன்னையும் பிதாவும்

[வே. நாராயணன், எம். ஏ. எம். எல்.]

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது உபதேச மொழி. அன்னை மகவைத் தன் வயிற்றிலே வைத்துக் காப்பாற்றுகிறாள்; பிறந்த பின்னும் குழந்தைக்கு ஒன்றும் தெரியாது. அதற்கு எது நல்லது என்று தாயே தெரிந்து கொடுக்கவேண்டும். குழந்தை நோயுற்றால், தாய் மருந்துண்டு பத்தியங் காத்து பாலோடு மருந்தும் சேர்த்து குழந்தை உண்ணுமாறு உதவுகிறாள். யாரேனும் ஒருவர் நமக்கு நன்மை அதிகமாகச் செய்தால், அவரைத் தாயினும் நல்லவர் என்று போற்றுகிறோமே, அதுவே தாயினும் நல்லவர் யாரும் இல்லை என்பதை நிரூபிக்கின்றது அல்லவா?

தாயைப் போலவே தந்தையும்; தாயின் வயிற்றுள் சிசு வளரும்போது அதற்கும் அதன் தாய்க்கும் தந்தையே எல்லா வகையிலும் உதவி புரிகிறான். பிள்ளைப் பேற்றால், தாய் பலவீனமா யிருக்கையில், தாய்க்கும் பிள்ளைக்கும் வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுக்கிறான். தாய் உடலைக் காக்கிறாள் என்றால், தந்தை மக்களுக்கு எண்ணும் எழுத்தும் அறிவிக்கிறான். தாயினின்றும் மக்கள் பிறப்பாலே பெறுகின்ற நற்குணங்கள் எல்லாம் தந்தை உதவுகின்ற அறிவின் வளர்ச்சியால் நிறம் பெறுகின்றன. ஆகையால் தாயோடு ஒப்ப, தந்தையும் போற்றப்படும் உரிமையைப் பெறுகிறான்.

பொதுவாக மக்களுக்குத் தந்தையும் தாயுமே கற்பிக்கும் குருமூர்த்திகள் ஆகின்றார்கள்; ஆயினும், பெற்றோரிற் சிறந்தோர் சிலர் தம்மினும் தம் மக்கள் சிறப்புடையவர்களாக வேண்டும் என்று சிறந்த ஆசார்யனிடம் தம் மக்களை அனுப்பி உயர்ந்த முறையில் அவர்களைப் பழக்குகிறார்கள். அப்பொழுது, தாய் தந்தையரோடு ஆசார்யனும் போற்றப்படும் உரிமையைப் பெறுகிறான். பெண் மக்களுக்கோ கணவனே ஆசார்யன் ஆகிறான்.

கல்வித்துறையிலே தேர்ச்சி பெற்ற மாணவனை அழைத்து ஆசார்யன் பிரிவுரையாக என்ன உபதேசஞ் செய்கிறான் என்பதை உபநிஷத் வாக்கியம் ஒன்று நன்றாக விளக்குகின்றது. அதாவது, 'தாயைத் தெய்வமாக் கொள்' தந்தையைத் தெய்வமாக் கொள்; ஆசார்யனைத் தெய்வமாக் கொள்' என்று.

இந்த உபதேசத்தையே வஸிஷ்டமுனிவரும் ஸ்ரீராமருக்குச் செய்திருப்பார் அன்றோ? இதனை மனத்திலே கொண்டுதானே, ஸ்ரீராமர், தம் அன்னையாகிய கைகேயி தேவியின் சொற்கொண்டே இளவரசுப் பட்டத்தை வேண்டாமல் வனத்திற்குச் சென்றார். தந்தையாரும் தாயாரின் சொல்லிற்குக் கட்டுப்பட்டவராய் இராமர் காட்டிற்குப் போவதைத் தடை செய்யாதிருந்தார்; ஆசார்யராகிய வசிஷ்டரும் தடை செய்யவில்லை. எனவே இம்மூவரையும் தெய்வமாக் கொண்டு இராமர் காட்டிற்குச் சென்றார் என்பது தெளிவாகின்றது.

பின்பு, பரதனுக்காக வஸிஷ்டர் பரிந்து பேசியபோது, இராமர் இவ்வுண்மையை நன்றாக விளக்கிக் காட்டுகிறார். "தாய் தந்தையர் மகனின் பொருட்டு ஓயாமல் என்ன எல்லாம் செய்கிறார்கள்; அப்படித் தாயும் யும் செய்யும் செயல்களுக்குத் மாறாக யாதேனும் எளிதா

ஒண்ணுமோ? ஆதலால், தன்னால் இயன்றவரை பொருளால் உதவுவதும் நீராட்டி நல்லாடை புனைவித்து எப்பொழுதும் இன் சொல்லால் மகிழ்விப்பதும் நன்றாகப் புகழ்வதுமே நன்மகன் செய்யத்தக்கவை" என்கிறார் இராமர். தெய்வத்திற்கு நாம் செய்யக்கூடியதெல்லாம் தெய்வத்தின் பெயரால் தெய்வவுருவே என்னத்தக்கவர்களுக்கு நம்மால் இயன்றவரை பொருளால் உதவி இன்சொல் வழங்குவதும் தெய்வமூர்த்தத்தை நீராட்டி, நல்லாடை புனைவித்து வாயாரப் புகழ்வதுமேயல்லவா? ஆகையால், அன்னையும் பிதாவும் தெய்வமாப் போற்றுதற்கு உரியவர் என்பதே ஸ்ரீ ராமர் கூறியதின் உட்கருத்து.

இவ்வுண்மையைத்தான் இராமர் சீதாதேவியிடமும் சொல்லுகிறார். "தர்மம் என்பது 'தாய் தந்தையருக்கு அடங்கியிருத்தல்' என்னும் இதுதான். இந்த தர்மத்தை மீறி உயிர்வாழ விரும்பேன். தாய், தந்தை, குரு என்று ஒருவனுக்குச் சுவாதீனமாயிருப்பவர்களை விடுத்து, சுவாதீனப் படாததான தெய்வத்தை எவ்வாறு ஆராதிக்கப் போகிறான்?" என்று இராமர் கூறுவது கவனித்தற்கு உரியது.

சிறிதே போற்றினாலும் பெரிதும் மகிழ்ந்து, நமது இஷ்டப்படியெல்லாம் நடந்துகொள்கின்ற அன்னையையும் பிதாவையும் விட வேறு தெய்வம் உண்டோ? கடவுள் என்பது ஒன்று உண்டு என்பது மெய்யே; ஆனால் அது காணவொண்ணாதது; அதனை எப்படி ஆராதிப்பது என்பதும் விளங்கவில்லை. அதன் இயல்பையும் குணங்களையும் அதன் விருப்பு வெறுப்புகளையும் அறிவாளிகள் பலரும் பலவாறு விவரிக்கிறார்கள். அது நிற்க, அன்னையும் பிதாவும் நாம் கண்கூடாகக் காணுந் தெய்வம். தம் இயல்புகளை நாம் நேராக அறிந்து கொள்ளுமாறு, அவர்கள் இருவரும் நம் கண்முன்னே காட்சியளிக்கிறார்கள். அவர்கள் கண்வட்டத்திலேயே நாம் பிறந்தபொழுதே தொடங்கி வளர்ந்து வருகிறோம். இந்த இரட்டைத் தெய்வத்தை வணங்கி வழிபட்டு அருளுக்குப் பாத்திரமாவதும் மிக வெளிது; நீராட்டிப் பாராட்டி நல்லாடை நல்லுணவு முதலியவற்றை அளித்து வாயாரப் புகழ்ந்து இன்சொல்லால் மகிழ்விப்பது ஒரு காரியமா? இது எல்லா மக்களாலும் சுலபமாய்ச் செய்யக்கூடியது என்றே, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று குழந்தைகளுக்கு முதன்முதலாக உபதேசிக்கப்பெற்றது. "பிரத்தியக்ஷமான தெய்வத்தை வழிபட்டுப் பழகினால், முன்னறியாக் கடவுளையும் வழிபட்டதாகும். அக்கடவுளை வழிபடுவதற்கும் இதுவே நேரான வழி" என்பதே உபநிஷத்திலே ஆசார்யன் சிஷ்யனுக்குச் செய்த அந்திம உபதேசத்தின் கருத்து.

'அன்னையும் பிதாவும்' என்ற 'உம்'மையால் குருவும் முன்னறி தெய்வமே. இவ்வாறு கண்ணாரக் கண்டு எளிதிலே ஆராதிக்கக்கூடிய இம்மூவரையும் தெய்வமாக் கொண்டு ஆராதித்து வந்தால், எதிர்பாராமல் நம்மை நோக்கி வரும் அதிதியையும் தெய்வமாக் கொள்ளும் பழக்கம் கைவரும். யார் எப்பொழுது அதிதியாக வருவார்கள் என்று நிர்ணயிக்க முடியாதாகையால், அதிதிகளைத் தெய்வமாக் கொண்டவன் உயிர் அனைத்தையும் தன்னையுமே தெய்வமாக் கொண்டு எப்பொழுதும் ஒழுகுவோன் ஆவான். அடிப்படையிலே அன்னையும் பிதாவும் ஆனதுபோல், முடிவிலே அகண்டாகாரமான பரம்பொருளும் கண்கள் காண்டற்கு எளியதான 'முன்னறி தெய்வ'மாகிவிடும். அடிப்படையிலே பிரவேசமில்லாதவர்களுக்கு பரம்பொருளை எவ்வாறு ஆராதிப்பது என்று விளங்காதாகையால், அவர்களாலே பாக்கியடைய முடியாது என்பதும் தெளிவு.

# பெரியாழ்வாரும் குழந்தைக் கண்ணனும்

— [பி. ஸ்ரீ.]

ஓடுகிறார்கள்; ஓடும்போதே விழுகிறார்கள். ஏன் இந்த ஆத்திரம்? ஏன் இந்த கோஷம்? எவ்வளவு பிரியமாக, ஏதோ ஒரு அபூர்வமான பொருளைத் தேடி வருவதுபோல் வருகிறார்கள்? அந்த அருமையான பொருள்தான் என்ன?

"எங்கே நமது ராசா? எங்கே குட்டி மகாராசா? எங்கேதான் பார்க்கலாம்?" என்று தேடுகிறார்கள்.

பாடுகிறார் சிலர்: மகிழ்ச்சி வசனத்தில் அடங்கவில்லை. வேறு சிலர் நானாவித வாத்தியங்களைக் கொட்டி முழக்குகிறார்கள். அந்தக் குதூகலம் அப்படிப் பொங்குகிறது. இன்னும் சிலர் கொட்டு முழக்கங்களால் ஆவேசம் கொண்டவர்போல் கூத்தாடுகிறார்கள். அந்த ஆயர்பாடியில்தான் என்ன கோலாகலம்!

ஆனந்தம் அதிகரிக்கிறது; அதிகரித்து அதிகரித்து அறிவைச் சூறையாடுகிறது. நெய்யையும் பாலையும் தயிரையும் உறியோடு அறுத்துக்கொண்டு வந்து, வந்தவர் போனவர்களுக்கெல்லாம் வாரிவாரி வழங்குகிறார்கள். வழங்கிவிட்டு அந்த அடுக்குச் சட்டிகளை முற்றத்திலே உருட்டிவிட்டுக் கூத்தாடுகிறார் சிலர்.

நெருங்கி மெத்தென்றிருக்கும் கூந்தல் அவிழ்ந்தாட ஆடுகிறார் ஆய்ச்சிமார், "இன்னது செய்கிறோம்" என்று தெரியாமலே.

என்ன விசேஷம்? ஏன் ஆய்ப்பாடி ஏதோ ஒரு அன்புச் சுழலில் அகப்பட்டதுபோல் இப்படிக் கிறுகிறுத்துப்போயிருக்கிறது?

நாமும் இவர்களோடு போய்ப் பார்ப்போம். அரண்மனை வாசலில் தான் என்ன நெருக்கம்! என்ன ஆனந்த கோஷம்! "சோபனம் சொல்ல வேணும்" என்று புகுவாரும், சொல்லியும் சொல்லாமலும் போவாருமாயிருக்கிறார்களே,— அவர்களெல்லாம் "இவ்வளவு லட்சணமுள்ள ஆண் குழந்தையைப் பார்த்ததே கிடையாது; இது உலகத்தை ஆளும்!" என்று சொல்லும் வார்த்தை காதில் விழுகிறது, எத்தனையோ ஜயகோஷங்களுக்கிடையே.

அரண்மனைக்குள் புகுந்து அந்தக் குழந்தையையே பார்த்து விடுகிறோம், அந்தப்புரத்திலே தாயோடு. என்ன ஆச்சரியமான குழந்தை! என்ன ஆச்சரியமான தாய்!

கொப்பரையில் மருந்துகளும் வாசனைத் திரவியங்களும் இட்டுக் காய்ந்து குளிர்ந்த தண்ணீர் தயாராக வைக்கப்பட்டிருக்கிறது. கைகால்களை மெள்ள நீட்டி நிமிரச் செய்து பசுமஞ்சள் உறைத்துப் பூசிப் பையக் குளிப்பாட்டுகிறாள் தாய்.

பிறகு நர்க்கு வழிக்கும்போது வாயைத் திறக்கிறது குழந்தை. "ஒன்றும் தெரியாத பச்சைப் பிள்ளை" என்று சொல்லிக் கொண்டு பார்க்கும் போதே....என்ன, கனவா?—நனவா? சகல லோகங்களையும் பார்க்கிறாள், பிள்ளை வாய்க்குள்ளே!

ஒவ்வொரு தாயும் அன்புக் கண்ணைக் கொண்டு பார்க்கும்போது தன் குழந்தையைத் தெய்வமாகவே பார்க்கிறாள். இங்கேயோ தாயன்பும் சாமானியமன்று; குழந்தையும் சாதாரணக் குழந்தையன்று.

ஆனால் இதே தாய் இதே குழந்தை மீது ஒரு குற்றப் பத்திரிகைப் படிப்பதையும் கேளுங்கள். தொட்டிலுக்குப் பக்கத்தில் குழந்தையும் கையுமாய் நின்று கொண்டே குற்றம் சாட்டுகிறாள், - பக்கத்திலுள்ள தோழியிடம் ஒன்று, இரண்டு, மூன்று என்று அடுக்கிக் கொண்டே போகிறாள் குற்றங்களை.

"தூளியில் கிடந்தால், அது கிழிந்து போகும்படி உதைக்கிறது" என்கிறாள். "ஐயோ, மெத்தென்றிருக்கும் இந்தக்கால் வலிக்குமே!" என்று எடுத்து ஒக்கலில் வைத்துக்கொண்டால், அப்போதும் இருந்த இடத்தில் இராமல் கிளம்பிக் குதித்து இடுப்பை முறித்து விடுகிறதாம். உடனே 'துஷ்டப்பயல்' என்று ஆசை தீர அணைத்துக் கொள்ளுகிறாளாம். அப்படி அணைத்ததும், வயிற்றிலே பாய்ந்து உதைக்கிறதாம்.

"அம்மா, தோழி! சக்தியில்லையடீ எனக்கு, இந்தக் குழந்தையின் சேஷ்டைகளை யெல்லாம் தாங்குவதற்கு! எப்படி மெலிந்து போனேன், பார்த்தாயா?" என்று புகார் செய்யும் தாயைப் பார்த்தீர்களா? "இப்படி யெல்லாம் சேஷ்டை செய்யப் பிள்ளைக்குத்தான் சக்தி போதுமா?" என்ற கவலையும் இவளை இளைக்கச் செய்தது என்பது குறிப்பு.

குழந்தை வேறு யாருமில்லை; ஜகன் மோஹன மூர்த்தியான கண்ணன்தான். அப்படியானால் தாய் யசோதைதானே?

"யசோதையாக நடிக்கும் பெரியாழ்வார்" என்று தான் சொல்லவேண்டும்.

இவர் தமது தோழரான செல்வ நம்பியைப் பார்க்க வேணுமென்று திருக்கோஷ்டியூருக்கு வந்திருந்தார். அங்கே கோயில் கொண்டிருக்கும் ஸௌம்ய நாராயணமூர்த்தியைத் தரிசித்துக் கொண்டிருக்கும்போது, அந்த விக்கிரகம் ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தை ஞாபகப்படுத்தியது. உடனே இவர் மனக்கண்ணுக்கு அந்தக் கோயிலே நந்தகோபன் அரண்மனையாக மாறிவிட்டது! அந்த ஊரும் ஆயர்பாடியாயிற்று!

நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் கோலம் காட்டும் ஸௌம்ய நாராயண மூர்த்தி ஆயர்களுக்கும் ஆய்ச்சிகளுக்கு மிடையே குழந்தைக் கிருஷ்ணனைப் பிரத்தியட்சமானார்! அப்போது ஆழ்வார் தாம் கண்ட ஸ்ரீ கிருஷ்ண ஜனனக் காட்சிகளை நமக்கும் காட்டுகிறார்; தாமே தாயாகவும் காட்சி வழங்குகிறார்!

பகவான் இப்பெரியாருக்குக் குழந்தைக் கிருஷ்ணனுடைய ஆனந்த ரூபத்திலே விசேஷமாகக் காட்சி தந்தாரென்று ஊகிக்கலாம். 'தாயிலான்' ஆகிய கடவுள்மீது களங்கமற்ற தாயன்பைப் பொழிகிறார் பெரியாழ்வார்.

தாயன்பு எவ்வளவு பரிசுத்தமானது! அது ஒரு மகாசமுத்திரம்—அளந்து ஆழம் காணமுடியாத சமுத்திரம். காதலர் காதலைப்போல் அலைபட்ட சமுத்திரமன்று; சாந்தமான—ஒளி மயமான—சமுத்திரம்.

குழந்தைக் கிருஷ்ணனைக் குறித்து இவர் பாடிய பாடல்கள் தாயின் தூய அன்பிலே விளைந்தவை. இப்பாடல்களிலே உண்மையான பிள்ளைத்தமிழைப் பார்க்கிறோம்.

நமது நாட்டில் தோன்றிய அருட்கவிஞர்களின் | ஆனந்தக்கனவிலே, இன்னிசையிலே, சிருஷ்டி - உத்ஸாகத்திலே, தவழ்ந்து வருகிறான் குழந்தைக் கண்ணன்! இத்தகைய பக்த கவிகளில் பெரியாழ்வார் ஒருவர்.

கண்ணனை இந்தியாவின் கண் என்றும், ஆத்மா என்றும் சொல்லலாம். ஆம்: இந்தியாவின் ஆத்மா என்றும் இளமை வாய்ந்தது. எத்தனையோ பக்தர்கள் - தேச பக்தர்களின் கனவுகளுக்கும் பக்திக்கும் அப்படியே இலக்காகிறது!

# சுசீந்திரம்

"சூடாமணி"

கன்னியங் குமரிக் கடலாடுந் - தொண்டர்
கண்டு தொழுமோர் சுசீந்திரமே!
பொன்னலங்காரக் கோபுரமும் - அரன்
புகழ்போல் விளங்கும் சுசீந்திரமே!

செந்நெலங் கழனிச் சங்கொலிக்கத் - தொண்டர்
தினமும் தொழுமோர் சுசீந்திரமே!
பொன்னலங்கார வண்டினங்கள் - அரன்
புகழை இசைக்கும் சுசீந்திரமே!

தென்னை கமுகு வெண்சாமரங்கள் - வீசித்
தினமும் தொழுமோர் சுசீந்திரமே!
பொன்னுலகாளும் மன்னவனும் - பழி
போகத் தொழுமோர் சுசீந்திரமே!

செங்கமலமே சேதாம்பலே - கண்டு
சிரித்தே களிக்கும் சுசீந்திரமே!
எங்கணுங் கூவும் குயிலிசையால் - நித்தம்
இன்பமே விளைக்கும் சுசீந்திரமே!

வேறு

இந்திரன் தேடிய தாணு லிங்கம்
எழுந்தருள் கோயில் சுசீந்திரமே!
அந்தரி தேடிய தாணுலிங்கம்
அமர்ந்தருள் கோயில் சுசீந்திரமே!

வானவர் போற்றிடும் தாணுலிங்கம்
வந்துறை கோயில் சுசீந்திரமே!
வானெழ மண்ணுறும் தாணுலிங்கம்
வரமருள் கோயில் சுசீந்திரமே!

கால்ஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா

பண்டிதராயிருந்த மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னகர, மஹோபதேசக,

பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

# ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

## கீர்த்தனை 7

சங்கராபரண ராகம்] [ஆதி தாளம்

### ஸாஹித்யம்

பல்லவி

மானஸ, பாவய ஸ்ரீசங்கரம் :

அனுபல்லவி

த்யான யோக கம்யம் ஸௌம்யம்
அவாப்த ஸமஸ்த காம்யம் :

சரணம்

மா குரு மானினீ ஜனதன விஷயே, பரிணதி விரஸே,
கௌது கதாவனம் ; பாதயமாம் மாமுதா ஸம்ஸ்ருதி
ஸாகரே, த்வத்வசம்வதம் பாலய யக்ஞேசம் :

### தாத்பர்யம்

ஹே மனமே! ஸ்ரீ பரமேச்வரனை நினை. அவர் த்யான யோகத்தினால் அறியக்கூடியவர். பிரஸன்னமானவர். ஸகல விதமான அபீஷ்டங்களையும் (தானே) அடைந்து (பரிபூர்ணமா யிருப்பவர்) பெண், பணம் என்று சபலங் கொண்டு அலையாதே. இவை இறுதியில் வெறுப்பைத் தரக் கூடியவை. வீணில் என்னை ஸம்ஸார ஸாகரத்தில் தள்ளாதே. உனக்கு அடிமையான யக்ஞேச்வரனைக் காப்பாற்று.

பல்லவி

(1) காஆ (மக)ரீ ஸா ஸா ஸநிநித நீஸா கஸ ரிகமா மககரி ரீ கா ஆ ஆ
மாஆ ன ஸ பா அஅஅஅவய ஸ்ரீஇ சம்ம் ம்ம்ம்ம் க ரஅ அஅ அஅ
ஆ
அஅ

(2) பாஆ (மக)ரீஸா ரிகமா மககரி கஸ ரிகமா மககரி கா காமக காமக
மாஆ ஸை பஅஆ அஅஅஅ ஸ்ரீஇ சம்ம் மம்மம் க ரஅஅ அஅஅ

ஸாநீ காமக கா
வய அஅஅ அஅம்

(3) கமபா கமபா (க)ரீஸா ரிகமக ஷ ஷ
மஅஆ அஅஆ னஸ பஅஅஅ

ரிகமக மககரி ஸா
அஅஅஅ வஅஅஅ ய

(4) நிதபம தபமக பமகரி ஸா ஷ ஷ
மஅஅஅ அஅஅஅ னஅஅஅ ஸ

ஷ

(5) தநிஸா தநிஸா (ஸநி)தா பாஅம ஷ ஷ
மஅஆ அஅஆ ன ஸஅஅ

கமபா கமபா ரீ ஸா
பஅஆ அஅஆ வ ய

(6) தநிஸா தநிஸா ஸநிதா தபபம ஷ ஷ
மஅஆ அஅஆ னஅஅ ஸஅஅஅ

மத மப பமமா மககரி
பாஅஅ வஅஆ யஅஅஅ

(7) கரிரிஸ ரிஸஸநி ஸநிநித நிததப ஷ ஷ
மஅஅஅ அஅஅஅ னஅஅஅ ஸஅஅஅ

தபபம பமமக மககரி ஸநி
பஅஅஅ அஅஅஅ வஅஅஅ யஅ

(8) ஸாரிஸ நீஸநி காநிக பாதப ஷ ஷ
மாஅஅ ஆஅஅ னஅஅ ஸஅஅ

மாபம காமக ரீகரி ஸநி
பாஅஅ ஆஅஅ வஅஅ யஅ முதலாவது ஸங்கதியைப் பாடி நிறுத்தவும்.

## அநுபல்லவி

(1) மகமா பா பஸ ஸநிநித நீஸாஆ நிஸ தாபா மத பமகரி
த்யாஆஆ ன யோஒ ஒஒஒஒ ஓகஅஅஅ கஅம் ம்யம் ஸௌஉ உஉஉஉ

கமபா
உ உம்யம்

(2) மகமா பா நிஸரீ ரிஸநி ஷ ஷ ஷ
த்யாஆஆ ன யோஒஒ ஒஒஒ

(a) ஸாஆ நீஸநி தாநிதபா ரீ கம பரி ரீ ஸா ஆ ஆ ஆ
அஅஅஅ வாஅஅ ஆஅஅப்தஅ கா அஅ ஆம் யம் ம்ம் ம்ம் ம்ம் ம்ட
பாதப மாபம கா
ஸஅஅஅ அஅர் வஅ

(b) ஷை ரிகமப தநிஸரி கமகரி ஸநிதப
கஅஅஅஅஅஅஅஅஅஅம்யஅஅஅம்
தநிஸரி ஸநிதபம் மகரிஸா ரிகம
ம்ம்ம்ம் ம்மமம் ம்மமமம் ம்ம்ம்

சரணம்

(1) மபாமபா மாஆ மா கா ஆ ககா மகா கரிரிஸ ஸா ஆ
மஆகுரு மாஆ னி னீ ஈ ஜன தன விஇஷஅ யே ஏ

(2) { ஆ மபாம பதபத பமமா
ஏ மஆகுரு உஉஉ மஅஆனி
ரிகமப கா கமபம கா ஆ
எஎஎ னிஇஇஇ ஈ ஈ } ஷை ஷை

ஆ ஸரீ ஸஸா நிஸஸநி நிதநீ ஸா ஸ மா கமா பா கம பம பா
ஏ பரி ணதி விஇஇஇ இஇர ஸே கௌ ஊ துகஅ தா அஅ அவனம்

(a) ஆ ஸாஅஸ ஸாஸநி தாஅநி ஸநிஸா ஆ நி ஸா ரி ரீ ஸாரிஸ நிஸ தநி
ம் பாஅத யஅமாம் மாஅஅ அமுதா ஆ ஸ ம்ம் ஸ்ரு இ ஸாஅஅ அஅ க்அ
பா
ரே ஏ

(b) { ஆ
ஏ
மபதநி
எஎஎஎ } ஸாஅஸஸா ஸநிதபதநி ஆ நீஇ ஸரீ ஸரி காமத ரீகரி
பாஅதஸஅ மஅஅஅஅஅ ஆ ஸம்ம் ஸ்ருதிஇ ஸஅ ஆஅஅ கஅஅ
ஸரீஇ ஸஸா ஸநி ஸநிதப
அஆஅ முதா ரேஎ எஎஎஎ

(c) { தப
எஎ
மபதநி
எஎஎஎ } ஷை ஷை ஸாரிஸ நிஸ தநி பா
ஸாஅஅ அஅ கஅ ரே

(1) ரீஇஸஸா நீஸநி தாபாதப ஸதா பபா கம பா (மப)ரீஈஸா
த்வஅத்வசம் வஅஎ அஅஅஅஅ பஆ லயஅ யஅ அக் ஞேஏசம்
மபதநி
தம்ம்ம்

(2) ஷை ஷை தநிஸரி கமகரி ஸநிதப
யஅஅ அஅஅக்ஞேஎஎ
மகரி ஸாரிகம
எஎஎ ஏசம்ம்
மானஸ

குறிப்பு:—அநுபல்லவியில் சிற்சில மாறுதல்கள்செய்து இந்த கீர்த்தனை இங்கு பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.—ப. ம.

# "தன் குற்றமறிதல்"

[டி. எஸ். ராமானுஜம் எம்.ஏ., எல். எல். பி. (லண்டன்)]

"தன்னைக் காணுதலே தலைவனைக் காணுதலும்"

நானற்ற ஆத்மஸ்புரணமே பெருந் தவமென்பது மஹரிஷிகளின் உபதேச சாரம். நானென்ற எண்ணம், அதாவது மனதிற்கு மூலமாக நிற்கும் அகங்காரம், அழிவுற்ற இடத்து ஆத்ம நிஷ்டை சித்திக்கிறது. உடனே ஜீவன் வேறு, சிவன் வேறு, என்ற பேத புத்தி விலகி ஆத்ம தரிசனமும் பிரம்ம தரிசனமும் இரண்டறக் கலக்கிறது. இவ்விதம் தன்னைக் காணுவதே தலைவனைக் காணுவது மாகும்.

"தன்னையுந் தனக்கா தாரத்
தலைவனை யுங்கண் டானேல்
பின்னையத் தலைவன் றானாய்
பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிவா யாகி
லுனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே
யீதுப தேசித் தேனே."

(கைவல்ய நவநீதம்.)

உயிரனைத்தும் ஒன்றே. அதுவே அன்பெனும் சிவம், என்ற பரிபூர்ண ஞானம் உபாதியாலும் (ரூப வேஷத்தாலும்) புறத்தே வேற்றுமை கல்பித்து உள்ளிருக்கும் ஒற்றுமையை மறந்து தூங்கி நிற்கும் மனத்தாலும், கண்டமாக்கப் படுகிறது. துவைதம் அற்றதே அத்துவைதமாகும். ஏக வஸ்து என்று சொல்லப்படும் சச்சிதாநந்தம் சக்தி, சிவம் என்று இரண்டாய் எக்காலத்திலும் இருந்தபோதிலும் அவ்விரண்டும்ஒன்றே என்றறிவது உயர் ஞானம். "நீ பெரிதா, நான் பெரிதா" என்று இரு கட்சியாளர் வாதிக்குங்கால் "நீயும் பெரிதல்ல, நானும் பெரிதல்ல, நாம்தான் பெரிது" என்றெடுக்கும் சமரசப் பேச்சு சிருஷ்டிகர்த்தாவின் ஸ்வஸ்வரூபத்தை விளக்குகிறது.

சஞ்சல மனதிற்கு ஆதாரமாயிருக்கும் "நான்" என்ற எண்ணம் (அகந்தை) தன்னைத்தான் அறிய முயலுபவன் அகற்ற வேண்டிய முதற் குற்றம். பழைய சித்தாந்தப்படி இக்குறையை நீக்க இரு வழிகள் உள: பிராணயாமத்தால் மனம் லயிக்கும் (எண்ணங்கள் ஒடுங்கும்). ஐக்யானுசந்தான தியானத்தால் (ஏகபாவனையால்) மனம் நசிக்கும். லயித்தது மீளும். ஆனால் நசித்தது மீளாது. லயமுற்ற யோகிக்கு சமாதியும் கலைதலும் மாறிமாறி உண்டாம். மனோ நாசமடைந்த ஞானிக்கு நீங்காச் சமாதியாம். அகந்தை அழிவுற "இந்த நான்" எங்கு உதிக்கிறதென்று தனக்குள் தேட வேண்டுமாம், நானென்ற அகங்கார ரூபமாய் விளங்கும் மனம் நசிக்க, "நாம், நாம்" என்ற அகண்ட பரிபூர்ண சத்தான ஹிருதயம் தானாகப் பரிமளிக்குமாம். ஆத்ம நிஷ்டை முடிவடைய பிராணயாமம் மட்டும் போதாது, தியானம் வேண்டும்; தியானமிருந்தால் பிராணயாமம் வேண்டியதில்லை (அல்லது அது தானாகவே முயற்சியின்றி சித்திக்கும்), என்றால் பாமர ஜனங்களுக்கேற்ற மோக்ஷ சாதனம் தியானமேயாகும். சுவாசத்தை அடக்கி யாளுவது எல்லோராலும் இயலாது. கஷ்டப்பட்டு அதை சாதித்தாலும், முழுப் பயனில்லை என்று மேலே கூறப்பட்டது. தியானத்தின் குறிப்பு ஹிருதய கமலத்தில் வசிக்கும் ஈசனென்று பொதுவாய் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

## படமாடும் கோயிலும் நடமாடும் கோயிலும்

ஆலய மென்றால் ஆ (உயிர்) லயித்திருக்கும் இடம். உடலைக் காதலியாகவும் உயிரைக் காதலனாகவும் நினைத்தால், ஒரு பெண் தன் நாதனை "பிராண

நாதா" என்று அழைப்பதின் உட்கருத்து புலனாகும். மேலும் நாதனை யிழக்கும் தறுவாயில் ஒரு பெண் "ஏ தெய்வமே" என்று அலறுகிறாள். தான் இழந்த கணவனை தெய்வமென்று தானே அறியாமல் அழைக்கிறாள் போலும்! அதுபோல உடலில் லயித்திருக்கும் பிராணனே அதற்குத் தெய்வம். அத்தெய்வந்தான் அதைக் கட்டிக் காத்து வருகிறது. அதைப் பிரார்த்தித்தால் தூலத்துக்கு வரும் கேடுகளனைத்தையும் நீக்க அது கடமைப்பட்டிருக்கிறது. மற்ற எதையும் தெய்வமாகக் கருதி வேண்டினால், குழந்தை தனக்கு வேண்டியதை தகப்பனிடம் கேட்காமல் அந்நியனிடம் கேட்பது போலாகும். சீக்கு வந்தால் கற்சிலையை வேண்டிக் கொள்ளுகிறோம், மருந்தும் சாப்பிடுகிறோம். குணமானால் ஈசனருளென்கிறோம். குணமாகாவிடில் கர்மாவை அனுபவித்துத்தானே ஆகவேண்டும் என்று நரிப் பேச்சு பேசுகிறோம். "கடவுளே, என் வியாஜ்யம் ஜயித்தால், பரிக்ஷை தேறினால், எதிரி மடிந்தால், பணம் குவிந்தால், உனக்கு என் சிகையைத் தருகிறேன், இரண்டு தேங்காய் உடைக்கிறேன், ஆடு கோழி காவு கொடுக்கிறேன்" என்றெல்லாம் பிரதிக்ஞை செய்வதின் அர்த்தம் என்ன? கடவுள் நம்முடைய ஏவலாளி போலும்! அன்பு என்ற ஒரு பாசத்துக்கே நமக்குள்ளிருக்கும் இறைவன் கட்டுப்பட்டுள்ளான். மற்ற விதத்தில் அவன் சர்வ சுதந்திரன். "body guard" (உடலைப் பாதுகாப்பவன்) என்ற ஆங்கிலப் பட்டம் அவனுக்கே தகும் "god" (கடவுள்) என்ற ஆங்கிலச் சொல் "guard" (பாதுகாப்போன்) என்று ஒலிக்கிறதல்லவா! தூலப் பிரக்ஞை யிழக்காமல் ஆறு ஆதாரங்களையும் கடந்து இணையில்லா ஞானம் படைத்து பிரளய காலத்தில் திரிமூர்த்திகள் கூட அழியும் போது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வல்ல காகபுஜண்டர் ஞானமும் இதுவே:

"பேரியதே குருமுறையும் யூகித்தாக்கால்
பேரின்பம் சிற்றின்பம் இன்னதென்று
நேரியதே தனதுள்ளம் பராமத்மாவை
நினைக்கவும் வருங்கேடு அதுவேதாங்கி
வாசியதே செய்யுமாம் தருமசகூறு
வையகத்தில் இதுநினையா கருமம்செய்து
பாசியதே தள்ளத்தான் கோவிலுற்றால்
பண்ணியதும் போகுமோ ஒத்துப்பாரு"

"நிலத்தினில் தினமுறைச் சாரமய்யா
நிர்மலன் ஈந்ததே ஒத்துநோக்க
குலத்தினில் இருப்பதோர் பாபமெல்லாம்
குணமாக்க வழிசொன்னால் கேட்பதுண்டோ
நலத்தினில் நிதிபடைத்தால் போதுமென்று
நாட்டினால் கூத்தன்கூர் விட்டுப்போமா
தலத்தினில் இவையறிந்து ஆதிதானே
தவமீந்தால் குறைகூறும் பேர்களுண்டு"

நம்மை நாமே அறிய வேண்டியதற்காகவே கோயில்களை ஆகம சாஸ்திரப்படி நமது முன்னோர்கள் அமைத்தார்கள். ஆலயத்தின் மூன்று பிராகாரங்கள் நமது முதுகெலும்புக்கடியேயுள்ள மூலதாரமென்று சொல்லப்படும் குண்டலினியின் மூன்று அனுபவப் போர்வைகளை குறிக்கும். இதன் உள் போர்வையே பிரம்மா (சிருஷ்டிக்குக் காரண சக்தியாயுள்ள பிரமை அல்லது இச்சை) என்று வழங்குகிறது. நடுப் போர்வை விஷ்ணு (தூல போஷணை). வெளிப் போர்வை மஹேசுவரன் (சாச்வதப் பற்று: இப்பற்றுதலுக்கு மாறாக ஸ்தூலம் கால அளவில் அழிவதால் எழுந்த ருத்திராகாரமே ருத்திரன் எனப்பட்டது.) மூன்று பிராகாரங்களுக்குள் கடவுள் இருக்கும் கர்ப்ப கிரஹம் அமைக்கப் பெற்றுள்ளது. அதுபோல் சிருஷ்டி கர்த்தாவான பரமாத்மா குண்டலினிக்குள் வசிக்கிறான். துவஜஸ்தம்பம் முதுகெலும்பையும், நந்தி ஹிருதயத்தையும் குறிக்கின்றன. இவ்விதம் படமாடுங் கோயிலின் ஒவ்வொரு பாகமும் நடமாடுங்கோயிலின் பாகங்களைக் குறிப்பதால், கோயில்கள் ஞான மார்க்கத்துக்கு ஓர் ஆரம்பப்படி. பிறகு நமக்குள் நாம் ஆராய்வதால்தான் பிரம்மத்தை அறிய முடியும் என்று யூகிக்க வேண்டும். "அண்டர்கோன் கடந்து நின்ற ஞானிகள், கண்ட கோவில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே." இவ்வுண்மையை மறந்து கர்மாவுக்கும் காலன் கைக்கும் ஆளாகி நிற்பது நமது இரண்டாம் குற்றம்.

## தசாவதார ரகசியம்

புராணம் ஒருபுற மிருக்க, தசாவதாரங்களின் வரிசைக்கிரமம் சிருஷ்டி தர்மத்தின் முற்போக்கை நன்கு விளக்குகிறது. மச்சாவதாரம், நீரிலேயே தோன்றி அதிலேயே வாழும் இனங்களிற் சிறந்ததாகிய மீனைக் குறிக்கும். கூர்மாவதாரம் நீரிலும் நிலத்திலும் வாழத்தொடங்கியஆமைமுதலியஊர்வன இனங்களைக் குறிக்கும். வராகாவதாரம் நிலத்தில்மட்டும் வாழக்கூடிய பன்றி முதலிய மிருகங்களைக் குறிக்கும். நரசிம்மாவதாரம் மிருக வர்க்கத்தினிடமாக மனித வர்க்கம் தோன்றியதைக் காட்டும், வாமனாவதாரம் மனித வர்க்கத்தில் முதலில் லிங்க சரீரம் (etheric body) தோன்றியதின் குறிப்பு (அது சுருங்கவும் பெருகவும் கூடுமாதலால் வாமனர் வானளாவ முடிந்ததுபோலும்.) பரசுராம அவதாரம் லிங்க சரீரம் இறுகியதையும், ராமவாதாரம் அந்த லிங்க சரீரத்துக்குமேல் தூல சரீரம் ஏற்பட்டதையும் முறையே குறிக்கும் (ராமர் முதன் முதலாக பரசுராமரை சந்தித்த போது அவரிடமுள்ள சக்திகளனைத்தையும் தான் வாங்கிவிட்டதாகச் சொல்வதின் கருத்து இதுவே). கிருஷ்ணாவதாரம் மனித வர்க்கத்தில் விசேஷ அறிவு இருந்தபோதிலும் உயிர்மேல் பற்றுதலில்லாத குறைவைக் காட்டுகிறது. இதனால்தான் பாரதப் போரில் ஜீவஹிம்சை பலவாறாக செய்யப்பட்டது. இக்குற்றத்தை கிருஷ்ண பகவான் அந்திய காலத்தில் உணர்ந்து அடுத்தாற்போல் புத்தாவதாரமெடுத்து அன்பு வெள்ளத்தைப் பெருக்கி அஹிம்ஸா தர்மத்தைப் போதித்து உயிர்மேல் பற்றுதல் ஏற்படும்படி செய்தான். இனி ஏற்படப் போகும் பத்தாவது அவதாரம் கல்கி எனப்படும் கலியென்றால் பேராசை, பேரின்பம் எனப்படும் பிரம்மத்தின் ஆசை, எல்லா ஜீவராசிகளுள் குடிகொண்டிருக்கும் சுயமான ஆசை. அவ்வாசையே இதுவரையில் சிருஷ்டிக்கு காரணமாயும் அதன் குறைகளைப் போக்கி முன்னேறும் ரீதியில் நடத்தும் மூல சக்தியாகவும் பரிமளித்து வருகிறது. அவ்வாசையை முடித்து வைப்பதே கல்கி அவதார ரகசியம்.

சூன்ய வெளியில் ஓர் அணு திரண்டு அண்டகோடிகளையும் அவற்றுள் யாவையும் உண்டாக்கி, அவற்றை ஓர் பரிபூரண பக்குவத்தில் நிலை நிறுத்துவதற்காகச் செய்துவரும் ஆண்டவன் லீலா நாடகத்தின் ஆரம்ப அங்கமொன்றைக் கவனிப்போம். ஒரே அணுவுள்ள உடல் பெற்ற புழு. இதற்கு அமீபா (amoeba) என்று பெயர். கண் காது மூக்கு வாய் கால் முதலிய அயவவங்கள் கிடையா. மூக்குச்சளி போன்ற பிரோடோபிளாசம் (protoplasm) எனப்படும் வெறும் சதைப்பற்று. நிலையான உருவ அமைப்பும் இல்லை. இதன் சளி நாலு பக்கமும் ஓடலாம், குறுகலாம். மண்ணில் ஊரும்போது தன் மேல்பட்டசத்தை தன் சளியால் வளைத்துக் கொண்டு அதை ஆகாரமாய்க்கொள்ளும். உடலுக்குள்ளிருந்த மலத்தைவிட்டு சளி அப்புறப்படுவதே அதை வெளியே தள்ளும் வழி, இதன் உடல் ஓர் அறையுள்ள வீட்டை ஒக்கும். ஒரு உள்ளிலேயே நாம் உண்ண வேண்டும், உறங்க வேண்டும், மற்ற வேலைகளையும் செய்ய வேண்டுமென்றால், எப்படி யிருக்கும்? ஆனால் அவ்வித நிலையிலிருந்துதான் நாம் பல பைகள், குழாய்கள், மற்ற அவயவங்கள் உடைய உடலைப் பெற்றிருக்கிறோம். இப்புழுவுக்கும் நமக்கும் ஒன்றுமட்டும் பொது. அது "உயிர் உணர்ச்சி" (sensitivity) என்பதே. சீதோஷ்ணங்களாலும் மற்ற விரோதிகளாலும் வரும் கேட்டைத் தவிர்த்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் உணர்ச்சி இப்புழுவுக்குமுண்டு. அதிக சீதள காலத்தில் இப்புழுவின் மேற்புறச் சளி ஆமை ஓடு போல் கெட்டியாகிவிடும். குளிர்காலம் முடியும் வரையில் புழு இக்கோட்டைக்குள் செத்ததுபோல் சும்மாயிருக்கும். வெப்பம் வரவே ஓடு பிளந்து புழு வெளி வரும். இதற்கும் தன்னைத்தான் சமைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையும் சக்தியுமுள்ள. நடுவில் இரண்டாய்

பிரிந்து ஒரு பாதி மற்றோர் பாதியி னின்று விலகி, இரு பாதிகளும் இரு புழுக்களாகி விடும். இங்கிலையில் பல ஆண்டுகள் கழியவே, "எத்தனை காலம் இவ்விதமிருப்பது" என்ற எண்ணம் அதற்குச் சுயமாக உதிக்க ஆரம்பிக்கிறது. "கண்" போன்றதொன்றிருந்தால் வெளியுலகைப் பார்க்கலாமே என்ற யுக்தி தோன்றுகிறது. பல ஆண்டுகளின் அனுபவத்தால் தனக்குள் இயற்கையாயுள்ள குற்றத்தை (குறைவை) உணர்ந்து வெளியான எண்ணமாதலால் அதை "சுய இச்சை" என்று சொல்ல வேண்டும். "சுய இச்சை எக்காலத்திலும் பரிமளிக்கும்" என்பதே ஈச்வர சங்கல்பம். அவ்விச்சையின் வாயிலாகத் தான் சிருஷ்டி கர்த்தா இப்பிரபஞ்சத்தைப் படிப்படியாய் முன்னேற்றிக்கொண்டு வருகிறான். அவ்விதம்தான் இனியும் முன்னேற முடியும்போலும். அப்புழு காலக்கிரமேண கண்களையும் மற்ற உறுப்புகளையும் அடைகிறது. இவ்விதம் ஓர் அறிவு முதலாக ஆறறிவுள்ள மனிதன் வரையில் சிருஷ்டி தருமம் முன்னேறி விட்டது.

இனி, மனிதனின் சுய இச்சை எதுவாக இருக்க முடியும்? சிருஷ்டி நாடகம் கல்பகோடி வருஷங்களாய் நடந்து வருகிறது. ஆதியில் கிளம்பிய ஓரே ஜீவ அணு உலோக வர்க்கம், தாவர வர்க்கம், மிருக வர்க்கம், மனித வர்க்கம் என்றெல்லாம் சமைந்துவிட்டது. பல்லாண்டுகளாக மனிதனிடமிருந்து மனிதனே தோன்றி வருகிறானே! இவனுக்கு மேற்கதி உண்டா? ஏட்டுச் சுரைக்காயை வைத்துக் கொண்டு கூச்சலிட்டு விவாதம் செய்யாமல் நம்மையே நாம் பொறுமையுடன் விசாரித்துக் கொள்வோமாகில், பல நாள் இருப்பதாக எண்ணி வீடு கட்டுகிறோம், பணம் சேர்க்கிறோம், மற்றும் பல வேலைகளில் ஈடுபடுகிறோமே ஒழிய, இறப்பதில் உண்மையான ஆசை நமக்கில்லை என்பது புலப்படும். கஷ்டம் வந்தபோது மனம் தடுமாறி செத்தால் தேவலை என்று வெறுப்படைகிறோமே தவிர, சுகமாயிருக்கும்போது யமனை விரும்பாமலிருத்தல் சகஜமே. உயிருடன் இந்த தூல உடலிலே எந்நாளும் இருக்க வேண்டுமென்பதுதான் மனிதனுக்கேற்ற சுய இச்சை. அவ்வாசை பூர்த்தியாக வேண்டுமென்றால் நமக்குள்ள எக்குறையையும் (பசி, பிணி, மூப்பு, முதலிய வற்றையும்) அகற்றவல்ல ஞானமும் சக்தியும் வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். இதை யொட்டி புஜண்டர் சொல்வதைக் கேளுங்கள் :—

'ஏதிபாம் சொன்னதே அவரின்வாக்கு
நாடலாம் அவ்வாறே மாறுதற்கும்
கோடியதாய் கழியுமே பளிங்கோர்சாரம்
குண்டலினிச் சித்தியால் செத்தோர்க்கெல்லா
தேடியதோர் உயிர்கொடுத் தெழுப்புங்காலை [ம்
தேசமே உணருமாம் அதுகாலத்தில்
சாடியதோர் மூப்பில்லை பசியுமில்லை
சாரங்கம் தொய்வதில்லை குருநாள்கேளு"

ஆனால் அவ்வித ஆசை சுயமாய் நமக்கு உண்டாகாமற் போனால், அதை நிறைவேற்றுவ தெவ்வாறு? அவ்வித ஆசை உண்டாக வேண்டுமென்றால் மனித உடலில் உயிருடன் எந்நாளும் வாழக்கூடிய இயல்பு இயற்கையாய் இல்லையே என்று உணர்ந்து, நாம் வருத்தப்பட வேண்டுமல்லவா? அவ்விதம் உணராமலிருப்பது நமது மூன்றும் குற்றம்.

## காமகோடி பீட மஹாத்மியம்

ஆதி சங்கராச்சாரியார் ஸ்தாபித்த காமகோடி பீடம் ஆசையின் முடிவை (பூர்த்தியை) குறிக்கிறது. அம்முடிவை அடையவல்ல ஞானத்தையும் சக்தியையும் மனித சமுதாயத்துக்குக் கொடுப்பதே கல்கி அவதார நோக்கமென்று மேலே சொன்னோம். காமகோடி பீடாதிபதிக்கு ஜகத்குரு என்ற பட்டமுண்டு. அப்பீடத்தின் கருத்தை நிறைவேற்றவல்ல இறைவனே கல்கி அவதாரமெடுத்து மனித வர்க்க மனைத்தையும் அமரவர்க்கமாய் மாற்றுவதற்கு வேண்டிய உபதேசத்தைக் கொடுக்கும் தருணம் நெருங்கிவிட்டது. ஏனெனில் நடக்கும் தாருண வருஷம் மாசி மாதம் முதல் தேதி கலி முடிவதாக நாம், பாரதமணியில் வெளியாகிய "பிரம்ம

ஞானம்" என்ற கட்டுரையில், மறுக்க முடியாத அத்தாட்சிகளைக்கொண்டு ஸ்தாபித்திருக்கிறோம். அத்தகைய தெய்வமே குருவாய் நிற்கும்போது, அதை ஜகத்குரு என்றுதானே அழைக்க வேண்டும். இவ்வாறு அமையுமென்றே ஆதி சங்கரர் தன் பீடத்தை காமகோடியென்றும் அதன் அதிபதியை ஜகத் குரு என்றும் நாமதேயம் செய்த தீர்க்க திருஷ்டியை புகழாமல் இருக்கவும் முடியுமோ! தற்காலம் அப்பீடத்தை காரணார்த்தமாய் வகித்து வரும் ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகளும் உண்மையான ஜகத்குருவின் வரவை எதிர்பார்த்து நிற்கும் உத்தம தவ சீலர்களில் ஒருவராக்க் [illegible]துவதில் நாம் சிறிதும் தயங்க வேண்டாம். அன்னாரை அண்டி நிற்கும் சிஷ்ய கோடிகளும், "வெகு சீக்கிரத்தில் கல்கி அவதாரம் ஏற்படும், அதற்குள் உயிரனைத்தும் ஒன்றே என்ற பிரம்ம ஞானத்துக்கு மாறுபாடாயுள்ள ஜாதிமத வேஷங்களை அறவே ஒழித்து, 'நான் பெரியவன் நீ சிறியவன்' என்ற அகம்பாவ எண்ணத்தை அகத்தின் மாசாகக் கருதி விலக்கி மனதைப் பால் குணம்போல் வைத்துக்கொள்வது முறை, அழகு" என்று உணர்ந்து அதற்குத் தக்கவாறு நடக்க முழு முயற்சி செய்வார்களென்பது நமது நம்பிக்கை.

நமது சமுதாய வாழ்விற்கு அறிவுத் தாய் தந்தை ஆகமமும் வேதமும் வேதம் அறிவு நூல். ஆகமம் அனுட்டான நூல். வேதத்தை வேதா வேதியன் வேள்விக்காக விளக்கினன். வேதியரென்றால் ஜாதி வேதியரல்ல. வேதத்தை முறையாகக் கற்று பார்த்தறிந்து பயன் பெற்ற அறிவாளரே, ஞானசிகாமணிகளே வேதியராவர். வேள்வி யென்பது ஆட்டுக்குட்டி யாகமாகாது. நானென்ற அகங்காரத்தை சித்சக்திக் கனலில் வாட்டி நானென் றெழும் பாசான்மாவை அவனென் றுணரும் சுத்தான்மா வாக்குவதே வேள்வியாகும். திருமூலர் இதை நன்கு விளக்கி யுள்ளார் :—

"நூலுஞ் சிகையும் நூவலிற் பிரமமோ ?
நூலது வேதாந்தம் ; நுண்சிகை ஞானமாம்."

(சிகை வைத்துப் பூணூல் மாட்டிக் கொண்டால் மட்டும் ஒருவன் பிராம்மணனாகான். வேதாந்த அனுட்டானமே நூலாகும். பிரம்ம ஞானமே சிகையாகும்.)

"வேதம் உரைத்தானும்
மெய்பொருள் காட்டவே"

(மெய்பொருள் காட்டுவதற்காகவே வேதம் ஓதப்பட்டது.)

"சத்தியம் இன்றித் தனிஞானம் தானின்றி
ஒத்த விடையம் விட்டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே."

(அனுட்டான மில்லா வேடம் தரித்த மூடப் பிராமணர்களை திருமூலர் இங்கு கண்டிக்கிறார்.)

வேதம் அறக்கடல். அன்பின்றி அறமில்லை. அன்பும் சிவமும் ஒன்றேயாம். சிவமயமான ஆன்மாக்கள்பால் அருள் மிகுந் தொழுகவேண்டும். இறைவன் அன்பர்க்கு அன்பனன்றோ!

"கொழுந்தன்பு செய்தருள் கூற வல்லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே."

பார்ப்பாரென்றால் தமது உள்ளத்துள்ள சொரூபத்தைப் பார்ப்பவரல்லவோ! அன்புள்ள சிந்தைமேல் அருளொளி எழும். அச்சோதியைப் பார்ப்பவரே உலகத்துக்கு முதன்மையாவர். இறைவனுக்கு எம்மனிதனும் பிள்ளையாகிறான். இதை மறந்து ஒரு கர்ம தாய் தந்தைக்குப் பிறந்தவர்கள் சோதர பாவம் கொண்டு ஒருவரை யொருவர் நேசித்தல், மற்றோர்களை வெறுத்தல், இதுபோல ஜாதி, மதம், தேசம், என்று மனித சமுதாயத்தை சேதம்செய்து ஓர் குறுகிய வரம்புக்குள் அன்பையும் அதற்கு வெளியில் துவேஷத்தையும் வீசி வரும் சீர்கெட்ட மனிதர்களை என்னென்று சொல்லுவது! சோதரத்தை விட்டு மித்திரத்வத்தைக் கையாளுவதே மனித சமுதாயம் முன்னேறும் வழி என்று காகபுஜண்டர் வெகு அழகாகவும் அதிதிருடமாகவும் காட்டி யுள்ளார் :—

" சாரமே உணராது நிற்போரப்போ
சங்கடங்கள்மெத்தவாம்முன்னுரைத்தேன்
...... ...... ......
நிலத்தினில் மித்ரத்வம் என்றசெய்தி
தீரமே அறியாது சோதரத்வம் [ளே"
நீட்டினல் வருமுறைகள் ஒண்டுகொள்
" கண்டுகொள்ளப் பசையன்றோ அதனின்துப்
கணக்கிடில் அதிமேலாம் மித்ரத்வம் [பு
விண்டுசொன்னேன்மாமுனிவர்தெளியுதற்கு
...... ...... ......"

வேதாகமப் பொருள்களை மறந்து அறமின்றி, அனுட்டானமின்றி, அருளின்றி, சநாதன தர்மம், வர்ணாச்ரம தர்மம் என்ற சாக்கு போக்குகளைக் கையாண்டு சோதரத்வம் என்ற சிவகோலம் தரிக்காமலிருப்பதும் இனி தரிக்கத் தயங்குதலும் நமது நான்காம் குற்றம்.

## இல்லறவியல்

வேதத்துக்குள்ள சிறப்பு ஆகமத்துக்குண்டு. ஆகமத்தை பரமசிவன் பார்வதிக்கு உரைத்தான். குமரி முதல் கைலை வரையில் நம்நாட்டுக் கோவில் வழிபாடுகள் ஆகமத்தை ஒட்டி நடக்கின்றன. மானிடத்தின் சம பாதியான பெண்மையை வெறுக்கும் வறட்டுத் துறவால் நமது நாடு கேடடைந்தது. ஆகம தந்திரம் பெண்மையை பராசக்தி ...மிசமாகப் பெருமைப்படுத்துகிறது. ஆணும் பெண்ணும் அமைவுறக் கூடி, வாழ்வை சிவ சக்தி யோகமாக்க ஆகமம் வகை செய்கிறது. "யோக சித்தி" இல்லறவியலில் உண்டு என்பதை இது விளக்குகிறது. ஆலயத்தில் கோசபீஜத்தை லிங்க வடிவாகக் காட்டிய கருத்தென்ன? தூல உடலுள் முதுகெலும்புக் கடியில் குண்டலினியில் பரமாத்மாவின் சிருஷ்டி சக்தி வசிக்கிறது. அதன்மேல் 'சகஸ்ரஹாரா' என்ற ஆயிரம் இதழ்கொண்ட தாமரைப் பூவில் சிருஷ்டி நாதன் வசிக்கிறான். சிருஷ்டி சக்தியை முதுகெலும்புக்குட்புறமாய் சிருஷ்டி நாதனுடன் சேர்ப்பதெவ்வாறு? இதை உணரவே இல்லற தர்மம் ஏற்பட்டது. நம்மிட முள்ள சிவன் (ஆண்மை) முதுகெலும்பின் உட்புறமாய் கீழ் இறங்கி வெளியே செல்லவே அவ்வெலும்பு ஒன்றுமில்லாத வெளியாய் (vacuum) நிற்கிறது. அப்பொழுது அதற்குள் சிருஷ்டிபூமியின் காந்த சக்தி பாய்கிறது. இதை அச்சமயத்தில் தூங்காமல் ஊக்கத்துடன் கவனித்தால் காந்த சக்தி முதுகெலும்பில் ஏறுவதுடன் மனமும் இழுத்துச் செல்லப்படும். வேறு விதம் மனம் இவ்விடங்களில் சஞ்சரிக்க இயலாது. சக்தி தன் நாதனை சகஸ்ரஹாராவில் சேரவே, எப்படி சுக்கிலமும் சுரோணிதமும் இரண்டறக் கலந்து சிருஷ்டி பூமியில் உடலை உண்டாக்கவல்ல அக்கினியைக் கிளப்புகிறதோ அதுபோல, சக்தி நாத நெருப்பு என்று சொல்லப்படும் அனல் (radio - activity) கிளம்புகிறது. இது பரிபூர்ண சக்தி வாய்ந்ததால் எதையும், எங்கேயும் எத்தருணமும் உண்டாக்கவல்லது! இதைக்கொண்டு இறப்பு, பிணி, பசி, முதலிய தூல விகாரங்களை யகற்றி மனிதன் சாஸ்வதமாக பூலோகத்திலேயே வாழமுடியும். இதுவே உண்மையான சுதந்திர நிலை. ஏனெனில் சக்திநாத நெருப்பு சுயஞ்சோதியானது. அவ்வனலை மூட்ட நமது உடலுக்கு வெளிப்படையாயுள்ள எந்த வஸ்துவின் உதவியும் வேண்டாம். இது மின்சார சக்தியைவிட எவ்வளவோ பராக்கிரமம் வாய்ந்தது. இவ்வுண்மையை திருமூலர் ஒருவாறு விளக்கியுள்ளார் போலும் :—

" கண்டேன் கமல மலர் உறை வான்அடி ;
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே."

(சஹஸ்ரஹாரா கமலத்தில் மகா குண்டலினி நாதனை உறைபவன் திருவடிகளைக் கண்டேன். என் அன்பினுள் யானே கண்டேன்.)

" ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்."

(அண்டபிண்ட சராசரங்களெல்லாம் ஒருவனை பரமனும் ஒருத்தியான பராசக்தியும் கூடிக் குழைந்த விளையாட்டேயாம்.)

உலகெலாம் சிவ சக்தி விளையாடல் என்று விளக்கிக் காட்டவே இல்லறத்தை நல்லறமென்று புகழ்ந்து பேசியது. அதை மிருகம்போல் நடத்தி அல்லது

சிற்றின்பமென வெறுத்து, அதனுள்ளிருக்கும் பேரின்பத்தைப் பொறுமையுடன் கவனியாது நிற்பதே நமது ஐந்தாம் குற்றம்.

## நாராயண நரசிம்மம்

மிருகவர்க்கம் பலவித இனங்களில் ஒன்றினிட மொன்றுகத் தோன்றி குரங்குவரையில் வந்தது. பிறகு குரங்கினிடமிருந்து மனிதன் தோன்றினுன் என்று சொல்வது சகஜம். ஆனல் மனிதனிடமுள்ள பல்வேறு குணங்களையும் அறிவு விசாலத்தின் ஏற்றத் தாழ்வையும் கவனிக்குங்கால் மற்ற மிருகங்களிடமிருந்தும் அவன் தோன்றி யிருக்கலாமென்று யூகிக்கலாம். எடுத்த காரியத்தை விடாப் பிடியாய் சாதிக்கும் தன்மை ஒரு மனிதனிடம் கண்டால், அவன் குரங்கினிடமாகத் தோன்றியிருக்க வேண்டுமென்று நாம்நினைப்பது பிழையாகாது. ஆடு, மாடு, எருமை, நாய், பூனை முதலிய நாட்டு மிருகங்கள், சிங்கம், புலி, கரடி முதலிய காட்டு மிருகங்கள் மனிதனிடம் பழகிய ஆசையினுலோ அல்லது மனிதன் வேட்டையாடி ஹிம்சை செய்வதைத் தாங்க முடியாமல் "நாமும் மனிதனுனல் நன்று" என்ற எண்ணம் அவைகளுக்கு உதித்ததினுலேயோ, மறுபிறப்பில் அவைகள் மனிதனுய் அவதரிக்கக் கூடும். இவ்விதம் மிருகவர்க்கத்தினிடம் தோன்றியதால் மனிதன் எவ்வளவு ஜென்மாக்களெடுத்து அறிவு வளர்ச்சி பெற்றும் தனக்குப் பிறப்பிடமான மிருகத்தின் சுபாவ குணத்தை மறந்தானில்லை. ஒரு நாய் மற்றொரு நாய் உண்பதைப் பார்த்து சகியாமல் குலைத்துச் சண்டையிடுவதை நாம் தெருக்கள்தோறும் பார்த்திருக்கிறோம். நாயிடமிருந்து தோன்றிய மனிதன் பொறுமை மிக்கவனு யிருத்தல் ஆச்சரியப்படத் தக்கதல்ல. பள்ளத்தில் ஒரு ஆடு குதித்தால் மற்ற ஆடுகளும் கண்மூடித் தனமாய் குதிக்கும். இத்தகைய ஆட்டுப் புத்தியை சில மனிதர்களிடம் பார்க்கலாம். துஷ்ட சுபாவம் வாய்ந்த மனிதர்கள் சிங்கம் புலி முதலிய காட்டு மிருகங்களிடமாகத் தோன்றியிருக்கவேண்டும், பொதுவாய் குரங்கினிடமிருந்து மனிதன் தோன்றுவது நேர்வழி யென்று சொல்லலாம். மிருகத் தன்மையினுலேயே மனிதன் இன்னும் மேன்மையடையாமல் தவிக்கிறுன். இக்குறையை உணர்ந்து மாற்ற முயலாமல் இருப்பதே நமது ஆரும் குற்றம். இவ்வுண்மையை விளக்கிக் காட்ட ஓர் புராணக் கதை உண்டு.

ஆதிசங்கராசாரியரும் ஸ்ரீகண்டாசாரியாரும் ஏதோ ஒருமுறை சந்தித்தபோது ஸ்ரீகண்டர் கேட்ட கேள்விகளுக்குத் தக்க விடையளிக்க முடியாமல், மதி மயங்கி, நரசிங்க மூர்த்தியைத் துதி செய்ய, அம்மூர்த்தி பக்த சங்கருக்குப் பிரசன்னமாகி, ஸ்ரீகண்டரைக் கொல்ல யத்தனிக்கவே, ஸ்ரீகண்டர் பரமசிவனைப் பிரார்த்தித்தார். உடனே பரமசிவன் சரப பக்ஷி ரூபம்கொண்டு நரசிம்மத்தைக் கிழித்தெறிந்தார். சங்கரர் ஸ்ரீகண்டரது பெருமையை உணர்ந்து, அவரை வணங்கி, சிவ தீக்ஷை பெற்றுக்கொண்டு சிவாநந்தலகரி, சௌந்தரியலகரி, முதலிய தோத்திரங்களைச் செய்தாராம். சங்கரர் துதித்த நரசிம்மத்துக்கும் ஸ்ரீ கண்டர் துதித்த பரமசிவத்துக்கும் உள்ள ஏற்றத் தாழ்வை இக்கதை குறிக்கிறதென்று சமயசண்டைகளைக் கிளப்பாமல் ஆர அமர அதன் உட்கருத்தை உணர்ந்தால் மனித சமுதாயமே ஏற்றமடையக்கூடிய விசேஷ ஞானம் கிடைக்கும். சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனுடைய அவதாரமாக இருந்தாலும் மிருக வேஷம் பூண்டதால் (நாய் வேஷம் பூண்டால் குலைத்துத்தானே ஆகவேண்டுமென்ற நியாயத்தை ஒட்டி) மிருகத் தன்மையை நரசிம்ம மூர்த்தி ஓர் அளவில் அனுபவிக்க வேண்டியதாயிற்று. விடை கூற இயலாது தன்னை வேண்டிய பக்தனுக்கு தக்க விடையைக் காட்டியிருக்க வேண்டும், அல்லது தெரியாததை தெரிந்தவர்களிடம் கற்றுக் கொள்வது முறை என்று விளக்கிக் காட்டியிருக்க வேண்டும்; இவ்விதம் செய்யாமல், தவறி நிற்கும் பக்தனுக்குப் பரிந்து ஜீவஹிம்சை செய்யத் துணிந்தது நாராயண நரசிம்மத்துக்கு மிருக வேஷம் தரித்ததால்

வந்த தூர்ப்புத்தி. பரமசிவன் என்றால் பரம ஜீவனைக் குறிக்கும். அதாவது நமக்குள்ளேயே யிருந்து நம்மைக் காக்கும் கடவுள், பரமாத்மா. அதனால்தான் நிரபராதியான ஸ்ரீகண்டர் காக்கப்பட்டார்.

## ஓலிகா தவம்

மஹேசன் மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்தான். ரதிதேவி தன் பிதாவைப் பதிப்பிச்சை கேட்டாள். அதற்கு அவன் "நான் என்ன செய்வது, உனது கர்மா" என்றான். உடனே ரதி அளவில்லாத் துயரத்தையும் கோபத்தையுங் கொண்டு, "உனது பெயரை ஒருதடவை உச்சரித்தாலே பல ஜென்மாக்களாகப் பண்ணிய கருமங்கள் பறந்தோடுமென்று புராணங்கள் கூறுகிறதே. உன் புத்திரியாக அவதரித்து நான் உன்னை நேரிலே கண்டு கேட்கும் வரத்தைக் கொடுக்க இயலாமல் 'உன் கர்மா' என்று மொழிந்தனையே. உனக்கா ஈசுவரப் பட்டம் தகும்" என்று சொல்லி மாமரம் ஒன்றை அடைந்து (மாமரத்தை மன்மதாலயம் என்று சொல்வதை ஈண்டு ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.) அதன் நிழலில் எரிந்த மன்மதனை திரும்பக் கொண்டுவர பிரம்மத்தைக் குறித்து தவம் செய்து வருகிறாளாம். இதை ஒட்டியே ஓலிகர பண்டிகை நடைபெற்று வருகிறது. அத்தவத்தைப் பூர்த்தி செய்யவல்ல ஆதிக் கடவுள் திரிமூர்த்தி கட்டத்தை தாண்டி நிற்பவன். குண்டலினிக்குக் குண்டலினியாய், குண்டலினியின் முப்போர்வைகளான திரிமூர்த்திகளுக்குள் தூலஉடலில் வீற்றிருக்கும் குருநாதன். அவன் இச்சையை உணர்ந்து அதன்படி நடக்க முயலுவதே ஓலிகா தவமாகும். அவ்விச்சையை உணராது நமது மனம் திரியுமிடமெல்லாம் திரிந்து நாமாகக் கல்பித்த இச்சைகளை பூர்த்திக்க முயன்று கர்மவினைகளை சுமப்பதே நமது ஏழாம் குற்றம்.

அகத்தின் மாசை அறிந்து விலக்கி ஆதிக்கடவுளை நமது உடலில் காண்பதெவ்வாறு? தனதிருப்பை பிறர் முன் கூறுங்கால் வலது மார்பைத் தொட்டு "நான்" என்றுரைப்பது மனித இயல்பு. ஆதலால் தூலதேகத்தில் வலது மார்பகத்துள்ள ஹிருதயஸ்தானமே ஆன்மநிலைக்குரியது என்று அனுபவ வாயிலாய் தீர்மானிக்கலாம். "ஹிருதயம்" என்ற வடமொழிச் சொல்லைப் பிரித்தால் ஹிருத் அயம் (இங்கே நான் இருக்கிறேன்) என்ற பொருள் கிடைக்கும். ஹிருதயம் என்று சகஜமாய் அழைக்கப்படும் தசைப்பை யொன்று தேகத்தின் இடது பக்கத்திலிருக்கிறது. அது ஆன்மாவின் சக்தி வாசஸ்தானம் எக்ளிஸியாஸ்டிகஸ் ecclesiasticus) என்ற கிருஸ்துவ ஞான நூல் "முட்டாளின் ஹிருதயம் இடது பக்கம், ஞானியின் ஹிருதயம் வலது பக்கம்" என்று கூறுகிறது. புஜண்ட ரிஷியும் இதனை கீழ்வருமாறு கூறியுள்ளார்:—

"சுவனிக்க ஹிருதயமோர் லக்ஷணந்தான்
கருதிடிலோ ஒன்றல்ல இரண்டுமென்று
சிவனிக்க உள்ளதே..............."

ஆகவே நமது வலது மார்பகத்தில் சிவன் (ஆண்மை, இரும்பு) இருக்கிறான், இடது மார்பகத்தில் அவன் சக்தி (பெண்மை, காந்தம்) இருக்கிறது. இவ்விரண்டும் மார்க்குழியை நோக்கிச் சென்று அங்கே இரண்டறக் கலந்து, அச் சக்திநாதக்கலவை முதுகெலும்புக் கடியேயுள்ள மூலாதாரக் குண்டலினிக்குள் செல்லும். வேறு சக்தி குண்டலினிக்குள் புகமுடியாது. ஏனெனில் தனக்குள்ளிருப்பதைக் காட்டக்கூடாதென்ற விதி அரக்கு முத்திரையிட்டு மூடின பெட்டிபோல் குண்டலினியை மூடிக் காக்கிறது. இந்நிலையை பிருத்தம் என்று சொல்லலாம். அதனுள் புகுதலே ரஹித மென்றும் புகுந்த பிறகு அங்குள்ள ஆதிபகவனின் சாஸ்வத சங்கல்பத்தை உணருதலே தாரக மென்றும் சொல்லலாம். உடலும் உயிரும் எந்நாளும் இணைபிரியாமலிருப்பதே ஆதிபகவன் சங்கல்பமென்பதை உணர்ந்து சக்திநாதக் கலவை மறுபடியும் மார்க்குழிக்கு வந்து இடது மார்பகத்தை அடைந்து அங்கே ஐம்பது வயது

(74-ம் பக்கம் பார்க்க)

# பாரத நாடு

## (அன்றும் இன்றும்)

எல். ஆர். விசுவநாதன்

"வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்"

1. பொன் விளையும் பூமி என்னும் புகழ் பெறும்
புண்ணிய நாடிதுவே
நன் மதி படைத்த நாவலர் பாவலர்
தோன்றிய நாடிதுவே.

2. தானத்திலே கலை ஞான த்திலே தேவ
கானத்திலே சிறந்தோர்
வானத்தவர் போற்றும் வீரரும் தீரரும்
வாழ்ந்த நன்னாடிதுவே.

3. ஸன் மார்க்கங்களால் சலியா உழைப்பால்
நன்மைகள் சேர்ந்தனவே
இன்ப மதல்லால் துன்பமே அறியார்
உன்னத நாடிதிலே.

4. இன்றைய தினமே ஏனிந்த நிலைமை ?
எங்குமே அறியாமை,
நன் னெறியில்லை கன்மன மதிலே
கொஞ்சமும் இரக்கமில்லை.

5. உழைப்பிலே வெறுப்பு உண்மையில் கைப்பு
உண்டுறங்க இனிப்பு
பிழைக்க வகையின்றிப் பிறரையண்டிச் சோம்பித்
திரிவதிலே மதிப்பு.

6. இவ்வித மிருந்தால் இன்னமும் கேடாம் ;
எழுவீர் ! சோதரரே,
செவ்வனே உழவுடன் கைத்தொழி லனைத்தையும்
கைக்கொண்டு களிப்புறுவோம்.

7. "பஞ்சமோ பஞ்சம் !" என்பதெல்லாம் வீண்
சோம்பலும் பேதைமையே
சஞ்சலம் தீரவழி யுண்டு தொழி லால்,
அஞ்ச லென்றருள் புரியும்

8. ஸ்ரீஜகன் மாதா ஆகுலம் தீர்ப்பாள்
அவள் பாதம்அநுதினமே
பூஜை செய்வோம் நம் பாரத நாடு
செழிப்புடன் புகழ் பெறவே.

# ஹரி கதை

[ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., பி. எல்.]

நம் தமிழ் நாட்டுச் சங்கீத சபைகளில் நடைபெறும் கச்சேரி வகைகளில் பெரும்பாலும் நாலு வகைக் கலைகள் சிறப்பாக விளங்குகின்றன. அவ்வ பாட்டு, நாட்டியம், கூத்து, காலக்ஷேபம் என்பவையாம். இந்நான்கிற்கும் பொதுவாக உள்ளது சங்கீதம்; அது ஒவ்வொரு கலையிலும் ஒவ்வொரு வகையில் பரிணமிக்கிறது.

முதல் வகையைப் பாருங்கள். பாட்டுக் கச்சேரிக்குப் பிரதானமானது பாடகரின் குரல். அவர் குரல்வளையை ஒரு வாத்தியக் கருவிபோலவே சாதகப் படுத்தி வைத்திருக்கிறார். எத்தனை எத்தனை விதமாக வாத்தியக் கருவியில் ஓசைகளை எழுப்பி அவற்றை வலப் படுத்தி இராக தாளங்களில் அடைத்து, கேட்போருக்கு இன்பம் மூட்ட முடியுமோ, அத்தனை விதமாகப், பாடகர் தமது குரலாலேயே சாதித்துக் காட்டுகிறார். இதிலேதான் அவருக்கு வெற்றி பேர் புகழ் எல்லாம். அந்தக் குரல் ஒன்றில்லா விட்டால் அவர் வித்தை சோபிக்காது. கேட்போருக்கும் விரசம் ஏற்பட்டுவிடும்.

இரண்டாவது வகையைப் பாருங்கள். இதில் நாட்டியம் ஆடும் பெண்ணுக்கு சங்கீதந் தான் அஸ்திவாரம். பாட்டின் துணையாக அவளுடைய முகபாவங்களும் அங்க அபிநயங்களும் அமைந்து பாட்டுக்கு ஒரு பொருளையும் வேகத்தையும் அளிக்கின்றன. பாட்டில்லாத நாட்டியம் வெறும் ஊமையன் சைகைபோல் இருக்கும். அபிநயம் இல்லாத பாட்டு சதிராகாது. நாட்டியத்துக்கு நல்ல சங்கீதம் உயிர்; அபிநயம் உடல். உடலிலேதான் உயிர் இயங்கக்கூடும். இவ்வுயிரும் உடலும் ஒன்றோடொன்று பிணைந்திருந்தால்தான் பார்ப்போர் கண் வழி காது வழி சென்று உள்ளத்தைக் கிளப்பும். ஒன்றைவிட்டொன்று தனித்து இயங்க இயலாது.

மூன்றாவது வகையைப் பாருங்கள். இதில் பல நடிகர்கள் சேர்ந்து மேடை மீது தோன்றி, ஒவ்வொரு பகுதியைப் பாடி ஆடுகிறார்கள். இதில் பாட்டுக்குத்தான் இடம் என்றுகூட சிலர் நினைக்கிறார்கள். என்றாலும், மேடைமீது தோன்றும் நடிகர் ஒருவரை ஒருவர் பாட்டிலோ வசனத்திலோ வென்றுவிட வேண்டுமென்று எண்ணினார்களானால் நாடகமே அழகு குலைந்து போகும். 'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை' என்னும் பொன்மொழிகள் நாடகமேடைக்குப் பொருந்துகிறது போல் வேறெந்த முயற்சிக்கும் பொருந்தாது.

பாட்டுக் கச்சேரியிலே பொருளில்லாத வெறும் ஓசைக்குக்கூட இடம் உண்டு. கூத்தில் பொருள் விளங்காத வசனமோ பாட்டோ இருக்கக்கூடாது. நடிப்பும் சொல்லுக்கேற்ற செயலாய் இருத்தல் வேண்டும். சங்கீதமே இல்லாத கூத்து தமிழ் நாட்டில் ஒருநாளும் இருந்ததில்லை. இனியும் இராது. மேனாட்டு நாடகங்களைப் "படித்துவிட்டு" சில சீர்திருத்தக்காரர்கள் தமிழ் நாடக மேடையிலிருந்து, சங்கீதத்தை விரட்டி அடித்துவிட வேண்டுமென்கிறார்கள். நாடகப் பிரியர்களின் ஆதரவாலும் சிறந்த நாடகக் கலைஞர்களின் நற்புத்தியினாலும் இந்தச் சங்கீதத்துக்கு இன்னும் சமாதி ஏற்படவில்லை.

நாலாவது வகையைப் பார்ப்போம். இதில் சங்கீதத்துக்கு தனி இடம் உண்டு. பாமரர் புத்திக்கும் புறம்பான உணர்ச்சிகளைத் தூண்டுவதற்கும், உயரிய கருத்துக்களைப் புகட்டும் உபந்நியா

சங்களுக்கு இடங் கொடுப்பதற்கும் சங்கீதம் பயன்படுகிறது. எளிய கதைகளைச் சொல்லி, சிறந்த கற்பனைகளைப் புகட்டுவதற்குச்சங்கீதம் எத்துணை நன்கு இடங் தருகிறத் என்பதற்கு இதுவே அத்தாட்சி. இசைத்துப் பாடுகையில் சிதைந்து போகிற சொற்றொடர்களில் சிக்கிக்கொண்டிருக்கும் பொருள்களை விளக்குவதற்காகவே இடை இடையே பாகவதர் பாடி முடித்த செய்யுளின் பதவுரை பொழிப்புரை சிறப்புரைகளைப் பன்னிப் பலமுறை சபையோருக்கு எடுத்துச் சொல்லுகிறார்.

இவற்றுள் நாட்டியக் கலை இடைக் காலத்தில் சிதைய ஆரம்பித்தது. 'கோயில்கள் மடங்கள் அரண்மனைகளில் நடனம் ஆடும் மங்கையர், 'நாகரீகத்தின்' கொடுமையால் விலைமாதராய்ப் போய் விட்டார்கள்' என்கிற காரணத்தை வைத்துக்கொண்டு கலைஞர் குறைகளைக் கலையின் தலையிலே சுமத்தி நாட்டியக் கலையையே விரட்டி அடித்துவிட்டார்கள் நம்மவர்கள். இப்பால் சில கலை வள்ளல்களின் நல்லுதவியால் இக்கலை மறுபடி உயிர்பெற்று துளிர்த்துத் தழைத்து வருகிறது.

இக்காலம் நடைபெறும் பாட்டுக் கச்சேரிகள் சங்கீதம் தெரிந்த விற்பன்னர்களுக்கே ஏற்றனவா யிருக்கிறதே யொழிய பாமரர்களுக்குப் பிடிக்கிறதாகக் காணோம். நாடகமும் அதன் நிழலான டாக்கியும் பாமர மக்களுக்கேற்றவையா யிருக்கின்றனவே ஒழிய விற்பன்னர்களும் கனவான்களும் கண்டு கேட்டுக் களிக்கக் கூடியனவாயில்லை. கீழ்த்தர அகசியமும் தாழ்ந்த வசனங்களும் தான் மக்களுக்குப் பிடிக்கும் என்று நாடகாசிரியர்கள் நினைத்துவிட்டார்கள் போலும்! இதனால் நாடகம் பார்க்கும் கும்பல் வேறு, சங்கீதம் கேட்கும் அபிமானிகள் வேறு என்று இரண்டு அலாதி வகுப்புகள் ஏற்பட்டுவிட்டன தமிழ் நாட்டில்.

"காலக்ஷேபமோ" வென்றால் பண்டிதர்களும் பாமரர்களும் ஆடவரும் பெண்டிரும் இளையோரும் முதியோரும் அனைவரும் அநுபவிக்கக்கூடிய ஒரு கலை வகை. இதில் நல்ல சங்கீதம் இருக்கிறது; நல்ல வசனம் இருக்கிறது; நல்ல அபிநயமும் நடிப்பும் இருக்கிறது. இதில் ஹாஸ்யம் இருக்கிறது. இதில் இல்லாததொன்றில்லை. யார் யாருக்கு என்னென்ன விருப்பமோ அத்தையெல்லாம் அள்ளி வீசுகிறார் பாகவதர். அவருக்கு வேற்றுமையில்லை. அனைவரும் ஒரே நிகர் அவர் கச்சேரியில்.

'காலக்ஷேபம் என்றால் என்ன? அது எப்படி உண்டாயிற்று? எப்படி வளர்ந்தது? அதன் முறையில் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்தால் அதனால் வேண்டிய பயனை நிறைவேற்றிக்கொள்ளலாம்' என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது அல்லவா? காலக்ஷேபம் என்பது வடசொல். அதற்குப் பொழுது போக்குதல் என்று தூய தமிழில் பொருள். அதாவது, பொழுது போகாமல் கஷ்டமாயிருக்கும்போது மனதுக்கு உகந்த ஒரு விளையாட்டோ, அரட்டையோ, குடியோ, கூச்சலோ, எல்லாவற்றிற்கும் பொழுதுபோக்கு என்னலாம். சீட்டு ஆடுகிறது ஒரு பொழுதுபோக்கு. கள்ளுக் குடித்துவிட்டு கூத்தடிக்கிறது ஒரு பொழுதுபோக்கு. கடற்கரையில் உட்கார்ந்துகொண்டு போகிற மோட்டார் வருகிற மோட்டார் பெயர்களை ஊகித்துச் சொல்லிக்கொண்டிருப்பதும் ஒரு பொழுதுபோக்குத்தான். ஊதியம் இல்லாத அலுவல் எதுவும் நமக்கு மன நிம்மதி அளிக்குமானால் அது பொழுது போக்கு என்னலாம். அதெல்லாம் காலக்ஷேபம் ஆகாது.

"காலக்ஷேபம்" என்கிற சொல் இப்போது வழக்கில் வந்துவிட்டது. இதற்குத் தனிப் பொருள் உண்டு. சமய சம்பந்தமான போதனைகளை நல்ல ருசிகரமான கதைகளைச் சொல்லிப் புகட்டி இடைஇடையே சங்கீதத்தையும் சேர்த்துப் பாடிக் களிக்க வைக்கும் வித்தைக்கு காலக்ஷேபம் என்று பெயர். இதைப் பாடிச் சொல்லுகிறவருக்கு ஆணானாலும் பெண்ணானாலும் பாகவதர் என்று பெயர். நல்ல யுக்தியுள்ள வைத்

தியன் கசப்பு மருந்துகளை வெல்லத்தில் வைத்து மறைத்து நோயாளிக்கு ஊட்டுவதுபோல, பாகவதர் நீதிபோதனைகளைச் சங்கீதத்தில் வைத்து மூடி நமக்குப் புகட்டுகிறார். மேலும் அப் புத்திமதியைத் தாமே நமக்கு நேரில் சொல்லாமல் ஒரு கதையைச் சொல்லி, அதில் வரும் கதாபாத்திரங்களில் ஒருவர் வேறொருவருக்குப் போதிக்கிறதாகச் சொல்லுகிறார். ஆகையால் காலக்ஷேபத்துக்கு இரண்டு சக்கரங்கள் சங்கீதமும் கதையும்; இவ்விரண்டும் இல்லையென்றால் காலக்ஷேபம் நடவாது. இதனால்தான் இந்தக் கலைக்கு ஹரிகதை என்றும் இதைச் சொல்லுகிற சரித்திரங்களுக்குச் சரித்திரக் கீர்த்தனம் என்றும் பேர் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கதாகாலக்ஷேபம் எப்படி உண்டாயிற்று, தெரியுமா? நமக்கு யாருக்காலும் சரி, ஒருத்தர் வந்து தடுத்துச் சொன்னால் பிடிக்கிறதில்லை. வெகுநாள் பழகினவராயிருந்தாலுங்கூட, அவர் நமக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டாரானால் அவர் வார்த்தையே வேம்பாய்க் கசக்கிறது. அவரைக் கண்டாலே அப்புறம் பிடிக்கமாட்டேன் என்கிறது. அதே மனுஷர், "ஆரோ ஒரு ஆள் ஏதோ ஒரு ஊரில் இப்படியெல்லாம் செய்து இப்படி இப்படி ஆனான்" என்று அந்த விஷயத்தையே ஒரு கதையாகச் சொல்லும்போது, நமக்கு அத்தனை வெறுப்பாயிருக்கிறதில்லை. அதற்குக் காரணம் மனித சமூகத்துக்கே கதை கேட்பதில் இருக்கிற ஒரு ஆராத ஆசை. இல்லாமற்போனால் பஞ்சதந்திரம், ஹிதோபதேசம், கதாமஞ்சரி, பிருகத்கதை, கதா சரித் சாகரம் முதலிய கதைகள் பல ஆயிரம் வருஷமாய் நம் நாட்டில் கர்ணபரம்பரையாய் வழங்கிவருவதோடு நில்லாமல் அக்கரைச் சீமைகளுக்கும் போய் அரபிக்கதைகள் என்றும் ஈஸாப் கதைகள் என்றும் காண்டர்பரி கதைகள் என்றும் வேறுருவில் உலாவி அந்நாட்டு மக்களையும் 'ஆபாலகோபாலம்' மகிழ்விக்கிறதென்றால் கதையின் சக்தி எப்படிப்பட்டதென்று வேறே சொல்லவும் வேண்டுமா?

இந்து தேச சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், நாட்டில் செழுமை நிலவிக் கலைகள் ஓங்கி இருந்த காலங்களில், குப்தர் ஆட்சியிலும், முகலாயர் ஆட்சியிலும் மராட்டியர் ஆட்சியிலும் விஜயநகர மன்னர் ஆட்சியிலும் தஞ்சை மராட்டியர் காலத்திலும் ஏனைய வித்தைகளைவிடக் காலக்ஷேபம் பண்ணும் வித்தை மிகவும் அதிகமாக ஊர்தோறும் மாகாணம் தோறும் நடந்து வந்ததாகத் தெரியவருகிறது. மராட்டியர் காலக்ஷேப முறைகள் தஞ்சாவூருக்கு வருவதற்கு முன்னரே, அங்கே தேவாரம், திருப்புகழ் திருவாசகம், திருக்குறள் முதலான தமிழ் நூல்களை ஓதுவார்கள். இசைத்துப் பாடியும் விளக்கிப் போதித்தும் சமயத் தொண்டு புரிந்து வந்தார்கள் என்பதற்கு அன்னாருக்கு மானியம் விட்ட கல்வெட்டுகளே சான்று. இவையே தவிர, வடநூல் வல்லார் அம்மொழியில் உள்ள முப்பெருங் காப்பியங்களான இராமாயணம் மகாபாரதம் பாகவதம் ஆகிய கதைகளை மாலை வேளைகளில் ஊர் கூடியிருக்கும் கோயில் மண்டபங்களிலோ அரசடியிலோ உட்கார்ந்து விளக்கு வைத்துக்கொண்டு படித்துக், கேட்போருக்குத் தென் மொழியில் தெளிய உரைத்து நீதிகளைப் புகட்டுவது வழக்கமாயிருந்து வந்ததாக 'ஹியூன் சுவாங்' 'பா-ஹியென்' முதலியோர் எழுதி வைத்திருக்கிறார்கள். தஞ்சையில் மராட்டிய மன்னர்கள் ஆட்சி ஏற்பட்டதும், வட இந்திய சங்கீத முறைகளில் சில தென் இந்தியாவில் புகுந்தன. முக்கியமாக மராட்டிய துருபதங்களும், கன்னட கீர்த்தனங்களும் தமிழ்க் கதா காலக்ஷேபத்தில் இடம் பெறத் தொடங்கின. இம்முறையை நன்கு கடைப்பிடித்துப் பேரும் புகழும் பெற்றவர்களுள் முதன்மையானவர்கள் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர், திருப்பயணம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், திருவையாறு லட்சுமணாசாரியார் ஆகிய திருமூர்த்திகள். இவர்கள் அடியொற்றி வந்த மாங்குடி சிதம்பர பாகவதர், ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், சிதம்பரம் சீரங்காசாரியார்,

சிங்கம் சடகோபாச்சாரியார் ஆகியவர்கள் இக்கலைக்குத் தனிப் பெருமையையும் அழகையும் மெருகையும் கொடுத்தார்கள். இவர்களை தவிர சரஸ்வதி பாய், பணிபாய் முதலிய பெண்மணிகள் கூட இவ்விதமான இக்கதையைப் பயின்று தேர்ந்து, முதற்படியை மிதித்தேறி ஆண்களோடு சரிநிகர் சமானமாய் "வாழ்வம் இந்த" காலக்ஷேப உலகிலே என்று மார்தட்டி. வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

இந்நாளில் காலக்ஷேபத்தின் முக்கிய அமிசங்கள் என்று பாகவதர்கள் விடாமல் பிடித்திருப்பவை :—

(1) தொடக்கப் பாட்டுக்கள்.

(2) கதை.

(3) நீதி போதனை ஆக மூன்றும். இவற்றுள் தொடக்கப் பாட்டுக்கள் கடவுள் வணக்கம், ஆசான் வணக்கம், காப்பு, நூல் பெருமை முதலிய குறிக்கும். இவை பெரும்பாலும் தமிழல்லாத மராட்டி, கன்னட, தெலுங்கு, வடமொழிப் பாட்டுக்களாகவே இருக்கும். இவற்றுக்குப் பொருள் கூறுவதும் மரபு அல்ல. ஒவ்வொரு பாட்டுக்கும் சந்தத்தை மாற்றுவதோடு தாள ஓசையைப் படிப்படியாய் உயர்த்திக்கொண்டே போய், கேட்போர் இனி என்னமாவது பேசமாட்டாரா என்று ஏங்குகிற வரையில் பாகவதரும் பின்பாட்டுக்காரருமாகப் போட்டிப் போட்டுக்கொண்டு பாடித் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் ஒரு நாழிகை.

(2) கதையை வெகு லாகவமாகத்தான் ஆரம்பிக்கிறார்கள். கிளைக் கதைகளையும் பொய்க் கதைகளையும் வெகு திறமையாகவே செருகி விடுகிறார்கள். ஒவ்வொரு பாத்திரமும் பிரவேசிக்கையிலும் பேசுகையிலும் ஒரு பாட்டு, விருத்தம், கீர்த்தனை, ஜாவளி, சுலோகம் ஏதாவதொன்று பாடி ஆகவேண்டும். வெவ்வேறு பாத்திரங்கள் பேசுகிறதுபோல பாகவதர் தொண்டையை மாற்றிக் கொள்ளுவார். மேல் வஸ்திரத்தையே மேலாடைபோலப் போர்த்திக்கொண்டு பெண் பாத்திரங்கள் பேசுகிற கட்டங்களில் நாணிக் கோணி வளைந்து நெளிவார். நாட்டியமும் சற்று ஆடிக்காட்டுவார். பாட்டில்லாமல் பத்து நிமிஷம் கூடப் பேசமாட்டார். பேசினாலும் அலுப்புத் தட்டிவிடாதா ?

(3) நீதி போதனை. இதைத் தனியே கடைசி வரையில் ஒத்திப்போட்டால் கதையைக் கேட்டதும் கூட்டம் கலைந்து விடும். அதற்காக இதை இடை இடையே கதாபாத்திரங்களின் வசன வாயிலாகப் புகட்டுவது வழக்கம். என்றாலும் மங்களம் பாடுவதற்கு முன் இந்தக் கதையைச் சொன்னவர்க்கும் கேட்டவர்க்கும் மற்றவர்க்கும் எல்லாருக்கும் என்னென்ன நன்மைகள் உண்டாகும் என்று பல சுருதி சொல்லுவது மரபு. அதற்கு முந்தி எத்தனைச் சுருக்கமாகவும் எத்தனை சிறந்த சங்கீத ரூபத்திலும் சொல்லமுடியுமோ, அத்தனை அளவில் இரண்டு மூன்று பாட்டில் போதனையை அமைத்துப் போதிப்பது பாகவதர் திறமையைக் காட்டும். இதில்தான் பாகவதர் சபையாரின் பொறுமையையும் நிர்வாகிகளின் பெருமையையும் ஒருங்கே பெறவேண்டும். இது உண்மையில் ஒரு அற்புத வித்தையே.

பாகவதரின் நடை உடை பாவனைகளை மட்டும் சொல்லிவிட்டு இக்கட்டுரையை முடித்துக் கொள்கிறேன். பாகவதர் நடை சற்றுக் கம்பீரமாகவே இருக்க வேண்டும். அவர் சரீரம் எத்தனை கம்பீரமாக இருக்கக்கூடுமோ அத்தனையும் அவருக்குப் பெருமைதான். மாங்குடி சிதம்பர பாகவதரைப் பார்த்ததில்லையா? தலையில் நிறையக் குடுமி வைத்திருக்க மேண்டும். கிராப்பு, மொட்டை, வழுக்கைத்தலை இவை ஒன்றும் சபையார் நன்மதிப்பைப் பெறவல்லதல்ல. சட்டை போடுகிறது ஹரிகதை காலக்ஷேபத்தில் முறை அல்ல. அரையிலும் வேஷ்டிதான் 'கச்சம் வைத்துக் கட்டுதல்' மரபு. காலில் சதங்கையும் கைகளில் தோடா, காப்பு, மோதிரங்களும், கழுத்தில் உருத்திராக்ஷம், அங்கவஸ்திரம், மார்பில் சந்தனம், வாயில் தாம்பூலம், குடுமியில் நல்ல புஷ்பம், நெற்றியில் பளிச்சென்று திலகம் அணிவது, இதுவரையில் வழக்க

# நிறமாலை மாண்புறல்

[டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ., அண்ணாமலைநகர்]

ஒரு நீளமான கயிற்றை எடுத்து, அதன் நுனியொன்றை, ஜன்னற் கம்பியொன்றில் கட்டிவிட்டு, மற்றோர் நுனியை நன்றாய் இழுத்துப் பிடித்துக்கொண்டு, மேலும் கீழுமாய் விரைவாய் ஆட்டினால், அக்கயிற்றில் அலைகள் உண்டாவதைப் பார்க்கலாம். அவ்வலைகளைக் கவனிக்கலாம். கயிற்றின் ஒவ்வொரு பகுதியும் மேலும் கீழுமாய் ஆடுகின்றதேயன்றி, அவை முன்னேயாவது பின்னேயாவது செல்வதில்லை. ஆதலின் 'அலை செல்கின்றது' எனும்போது, அலைவடிவம் செல்வதையே நாம் குறிக்கிறோம். கயிற்றின் நுனி ஆட்டப்படும்போது, அதற்கடுத்த பகுதி, சிறிது நேரத்திற்குப் பின் அவ்வாறே ஆடத் தொடங்குகின்றது. இன்னும் சிறிது நேரத்திற்குப்பின் அதற்கும் அடுத்த பகுதி, ஆட ஆரம்பிக்கின்றது. இவ்வாறே, முறையாய் ஒவ்வொரு பகுதியும் ஆடலாகின்றது. இதனால் கயிற்றில் அலைவடிவம் ஏற்படுகின்றது. கயிற்றின் நுனியை, ஒருதரம், மேல்கொண்டுபோய் - நிலைப்பாடான இடத்திற்குக் கொணர்ந்து - கீழே கொண்டுபோய் - நிலைப்பாடான இடத்திற்கு மீண்டும் கொணரும்போது, கயிற்றில் ஒரு அலைவடிவம் காணப்படுகின்றது. இதையே ஒரு அலை உண்டா

---

மாயிருந்து வருகிறது. சப்பளாக்கட்டை கையிலிருக்க வேண்டும். அதை அனாயாசமாக அடிக்கத் தெரியவேண்டும். பின்பாட்டுக்காரரைவிட பாகவதர் குரல் சற்று கட்டையாகவும் விரசமாகவும் இருப்பதுதான் சபைக்கு எடுத்தது. எல்லாவற்றையும்விட முக்கியமானது சில ஆங்கிலச் சொற்களை அப்போதப்போது சொல்லுவதோடு, "பெர்னார்டு ஷா" போன்ற மேனாட்டு மேதாவிகளுடைய கருத்தை எதிர்த்து ஓரான் வழியாய் வந்த வழக்கங்கள் அனைத்தையும் ஆதரித்துச் சீர்திருத்தக்காரர்கள் வாதங்கள் அனைத்தையும் கிள்ளுக் கீரையாகக் கண்டித்து எறிய வேண்டும். நவீன நாகரிகத்தையும் முற்போக்கு இயக்கங்களையும் எவ்வளவு தூரம் முடியுமோ, அவ்வளவு தூரந் தூற்றவேண்டும். இதுதான் ஹரிகதை.

ஹரிகதை செய்கிற பாகவதருக்குத் தெரியாத விஷயமில்லை; இருக்கவும் முடியாது. தினசரிப் பத்திரிகை ஆசிரியருக்குத் தெரியாத விஷயம் உண்டா? அவர் விமரிசனத்துக்குள் அடங்காத பேர்வழி இருக்கமுடியுமா? அதேமாதிரிதான் பாகவதரும். அவருடைய அறிவுக்கு எல்லை இல்லை. அவருடைய உரிமைக்கும் வரையறை இல்லை. அவர் வகுத்ததே வாய்க்கால்; அவர் சொன்னதே சட்டம்; அவர் இட்டதே திட்டம். வேத, புராண, இதிகாச, தர்ம சாஸ்திர, ஸூத்திர பாஷ்யங்களைஎல்லாம் கரைத்துக் குடித்து அல்லவா நம் முன் நிற்கிறார்! அவர் சொன்ன சொல்லுக்கு எதிர்ச்சொல் உண்டா?

இல்லாமலா கிறிஸ்தவப் பாதிரிமார் என்ன, தேசீயப் போர்முனை என்ன, இன்னும் இப்படிப்பட்ட பெரிய பெரிய பிரசார கர்த்தாக்கள் எல்லாரும் இப்போது ஹரிகதா காலக்ஷேப முறையைக் கையாண்டு வருகிறார்கள். இனிப் பெருங்காய வியாபாரிகள், சவுக்காரக் கம்பெனிகள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், மருந்துக் கடைக்காரர்கள்கூட விளம்பரஞ் செய்கிறதற்குத் தகுந்த சரித்திரக் கீர்த்தனைகளை எழுதுவித்துப் பெயர்பெற்ற பாகவதர்களைக் கொண்டு ஹரிகதை பண்ணச் சொன்னார்களானால் ஆச்சர்யப்படுவதற்கில்லை. ஏன் நானே இப்போ ஒரு கதை பண்ணிவிட்டேனல்லையா?

பிற்று என்கிறோம். இம்மாதிரியே, மற்றோர்தரம் ஆட்டி முடிந்தபின், இரண்டு அலைகள் கயிற்றில் உண்டாகின்றன. அதற்கும் அடுத்த ஆட்டம் ஆனபின், மூன்றும், இப்படியாகவே, அலைகள் தொடர்ந்துண்டாகின்றன. அதாவது 'அலை வடிவம்' மீண்டும் மீண்டும் ஏற்பட்டு கயிற்றின் வழியே செல்கின்றது. ஒரு அலைவடிவம் ஆரம்பமாகும் இடத்திற்கும், அதற்கடுத்தது ஆரம்பமாகும் இடத்திற்கும் இடையாயுள்ள தூரம் 'அலை நீளம்' எனப்படுகின்றது. அதாவது, அலை நீளம், கயிற்றின் நுனியின் (அல்லது ஒவ்வொரு பகுதியின்) முழு ஆட்ட காலத்தில், அவ்வாட்ட முறை சென்றுள்ள தூரம். கயிற்றின் முனையை ஆட்டும் துரிதத்தை மாற்றுவதால், அலை நீளம் மாறுபடுவதைக் காணலாம். எனவே, அலைகளை விஞ்ஞானீய முறையில் கவனிக்கும்போது, அவற்றின் முக்கியமான லக்ஷணங்கள் என்று பின்வருபவற்றை அடைகிறோம். அலைகள் செல்வதற்கு, அல்லது அலையியலான இயக்கத்திற்கு, மேலும் கீழுமாய் ஆடக்கூடிய ஒன்று வேண்டும். அவ்வொன்று போன்ற பல முறையாய்த் தொடர்ந்து அமைந்திருக்கவேண்டும். ஆட்டங்கள் மேலும் கீழுமாய் இருக்குமேயன்றி, தொடர்ந்து முன்னேறும் வகையாய் இருப்பதில்லை. ஒரு முழு ஆட்டக் காலத்தில் அலைவடிவம் முன்னேறும் தூரம், அலை நீளம், அலை நீளங்கள், தக்கவாறு வேறுபடும்.

இவற்றைத் தவிர, அலைகளால் ஏற்படும் மற்றோர் விளைவைப் பற்றிச் சொல்லலாம். பல அலைகள் ஒன்றின் பக்கம் மற்றொன்றாய், ஒரே திசை நோக்கி முன்னேறுகின்றன எனக் கொள்ளலாம். அவை செல்லும் வழியில் குறுக்கே ஒரு தடையை வைத்தால், என்ன நேரும் என்பதைக் கருதலாம். அத்தடையின் நடுப்பகுதிகள் மீது படுகின்ற அலைகள் தடைப்பட்டுவிடுகின்றன. தடைக்கு மேலும் கீழும் சற்றே தூரத்திலுள்ள அலைகள் எவ்வகையான மாறுதலின்றி முன்போலவே செல்கின்றன. தடையின் ஓரங்களிலுள்ள அலைகளைக் கவனிப்போம். தடையின் மேலோரத்திலுள்ள அலைகளின் கீழ்வாட்ட ஆட்டங்கள் தடைப்படுகின்றன. தடையின் கீழோரத்திலுள்ள அலைகளின் மேல்வாட்ட ஆட்டங்கள் தடைப்படுகின்றன. ஆகையால், அவை குறைவான ஆட்டத்துடனேயாயினும், தடையைக் கடந்துவிடுகின்றன, கடந்த பின், அவ்வாட்டங்கள் தடையோரங்களுக்குப் பின்னும் நடைபெறுகின்றன. தடைக்குப் பின்னும் அலையியக்கம் உள்ளது. அதாவது, தடைக்கு நேர் பின்னேயுள்ள இடைப் பிரதேசம் முற்றும் அலையற்ற அமைதியுடனில்லை. அப்பிரதேசத்தி னுள்ளும், அதன் ஓரப்பகுதிகளில் அலையியக்கம் உள்ளது. அதாவது அப்பிரதேசத்தின் வரம்புகளில், ஆடிக்கொண்டிருக்கும் பகுதிகள் உள்ளன.

ஒளி நேர்க்கோடுகளில் செல்வதையே நாம் சாதாரணமாய்ப் பார்க்கிறோம். ஒரு சந்தின் வழியே வரும் ஒளியின் பாதையில், அச்சந்தைவிடச் சிறிய வஸ்துவைக் குறுக்கிட்டால், அவ்வஸ்துவுக்கு மேலும் கீழும் ஒளிக் கதிர்கள் நேரே செல்கின்றன. அவ்வஸ்துவின் பின் நிழல் விழுகின்றது. அதாவது, அவ்வஸ்துவின் பின்புறப் பிரதேசம் ஒளியற்றதாயுள்ளது. ஒளி, அலைகளானதாயிருந்தால், அங்கு சிறிது ஒளி பரவியிருக்கவேண்டும். அங்கு, ஒளியில்லா திருப்பதைக் கண்ட பின்னும் விஞ்ஞானிகள் ஒளி அலைகளாய்ச் செல்கின்றது எனச் சொல்வதற்குக் காரணம் என்னவெனக் கேட்கலாம். விஞ்ஞானிகள், நுட்பமான கருவிகளைக்கொண்டு, அச்சிறு வஸ்துவின் பின்புறப் பிரதேசம் முழுதும் நிழலா யில்லாமல், அந்நிழலின் ஓரங்களில், நிழலுக்குள்ளும் ஒளி பரவியுள்ளதைக் கண்டனர். இவ்வாறு ஒளி நுழைந்துள்ள இடம் மிகமிகக் கொஞ்சமானது. 33 அங்குலத்தின் ஆயிரத்திலொரு பங்கைவிடக் குறைவானது. இதனாலேயே சாதாரணமாய், ஒளி படர்ந்த நிழற்பாகம் நமக்குத் தெரிவதில்லை. நுட்பமான கருவிகளைக் கொண்டு நிழ

லைப் பரிசோதிக்கும்போதே அவ்விடம் காணப்படுகின்றது. இவ்வாறு நிழலோரத்தில் அதனுள் ஒளி புகுதலால் ஏற்படுகின்ற விளைவிற்கு, 'அலை பின்ன விளைவு' அல்லது 'டைப்ராக்ஷன் எபக்ட்' என்று பெயர். இவ்விளைவை ஆதாரமாய்க் கொண்டு, சோதனை (எக்ஸ்பெரிமெண்ட்) செய்வதினின்று, ஒளியின் அலை நீளத்தையும் கணக்கிடலாம். அப்படிக் கணக்கிட்டால், சாதாரணமாக ஒளியின் அலை நீளம், லக்ஷத்திலிருபங்கு (2/100000) அங்குல நீளமே யுள்ளது எனக் காண்கிறோம். கயிற்றில் கண்ட அலைகள் பல அங்குல நீளமானவை. ஒளியலைகள் மிகச் சிறியவையா யிருப்பதினாலேயே, ஒளி நேர்க்கோடுகளில் வருவதுபோல் காணப்படுகின்றது. ஒளி நேர்க்கோடுகளில் செல்வது என்பது மிகமிகக் கிட்டத்தட்ட ஒளியின் அலையியல் கொள்கை (வேவ் தியரி ஆப் லைட்) என்று பெயர். அவ்வலைகள் எங்கும் வியாபித்துள்ள விசும்பில் (ஈதரில்) உள்ள ஒன்றின் துடிதுடிப்பால் ஏற்படுபவையென விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

1. இனி, ஒளியைப்பற்றி முப்பட்டைக் கண்ணாடியால் கண்டறியப்பட்ட விஷயங்களுடன், ஒளியின் அலையியல் கொள்கை (வேவ் தியரி) எப்படி இணைகின்றது எனப் பார்க்கலாம். முப்பட்டைக் கண்ணாடியால், வெண்ணொளி பல நிற ஒளிகளாலானது எனக் கண்டோம். ஆனால் அப்பல நிற ஒளிகளுக்கான காரணம் தெரியாதிருந்தது. ஒளியின் அலையியல் கொள்கை (வேவ் தியரி)யேற்பட்டவுடன், அக்காரணம் தெரிந்தது. பலநிற ஒளிகளும் பல்வேறான அலை நீளங்களுடன் உள்ளனவெனத் தெளிவாயிற்று. சிவப்பு ஒளியின் அலை நீளம் சுமாராக, முப்பதினாயிரத்திலொன்று (1/30,000) அங்குலம்; ஊதா (வயலெட்) ஒளியின் அலை நீளம் சுமாராக, அறுபதினாயிரத்திலொன்று (1/60,000) அங்குலம்.

முப்பட்டைக் கண்ணாடியால், சூரியனினின்று நிறமாலை (ஸ்பெக்டரம்) கிடைத்தது. சூரியனினின்று நாம் ஒளி மட்டும் பெறவில்லை; சூட்டையும் பெறுகிறோம், ஆதலால், அந்நிறமாலையில் சூடுண்டா என்பதை அறிவதற்கென, சில விஞ்ஞானிகள் நிறமாலையை ஆராயலாயினர். நுட்பமான வெப்ப நிலையளவி(தெர்மாமீடர்)கள் கொண்டு, நிறமாலையைப் பரிசோதித்தபோது, ஆரஞ்சு, சிவப்பு நிறப் பகுதிகள் சற்றே சூடாயிருப்பதைக் கண்டனர். சிவப்பிற்கு அடுத்தாற்போலிருந்த இடத்திலும், சிவப்புப் பகுதியிலிருந்ததைவிட அதிகச் சூடு இருந்ததை அறிந்தனர். இதனின்று சூடும், ஒளியைப் போன்றே, அலையியலானது என்று முடிவுகட்டினர். சிவப்புக்கு அடுத்துள்ள இடத்தில் சூரியனினின்று வரும் சூட்டலைகள் படுவதினாலேயே, அது சூடாயுள்ளது என யேற்பட்டது. ஆனால் அவ்விடத்தில் எந்நிறமும் கண்ணிற்குப் புலப்படவில்லை. எனவே, சூட்டலைகள் கண்ணிற்குப் புலப்படாத அலைகள் எனத் தெளிந்தது. கண்ணால் காண முடியாத அவ்வலைகள் 'கட்புலனாகா அலைகள் (இன்விஸிபில் வேவ்ஸ்)' எனவும், கண்ணால் காணமுடிந்த பலநிற அலைகள், 'கட்புலனும் அலைகள்' (விஸிபில் வேவ்ஸ்) எனவும் வழங்கப்படலாயின.

கட்புலனாகா அலைகளைப்பற்றி மேலும் ஆராய்ச்சிகள் செய்தபோது, சூட்டலைகளுக்குள் சிறிதானவை மட்டுமே கண்ணாடி வழியாய் வருமெனவும், கல்லுப்பின் வழியே பல சூட்டலைகளும் செல்லும் எனவும் அறியப்பட்டது. ஆதலின் முப்பட்டை வடிவான கல்லுப்பை (ராக் ஸால்ட் ப்ரிஸத்தை)க் கொண்டு, 'போலாமீடர்' என்ற நுட்பமான வெப்பமளக்கும் கருவியால், சூட்டலைகளைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. இக்கருவியால், பத்து லக்ஷத்திலொன்று (1/10,000,00) டிகிரி வித்தியாசமான வெப்ப நிலையை (டெம்பரேசரை) அளவிடலாம். சிவப்புக்கு அடுத்ததான, இவ்வலைகளுக்கு அறச்சிவப்பு (இன்ப்ராரெட்) அலைகள் எனப் பெயரிடப்பட்டது. அறச்சிவப்பு அலைகளும், ஒளிச்சிவப்பினுடன் தொடர்ச்சியா யிருந்ததால், அவையும் நிறமாலையைச் சேர்ந்

தவையேயெனயமைந்தன. இப்பொழுது கண்ணால் பார்க்கமுடியாத பகுதியொன்றும் ஒளிநிறமாலையுடன் சேர்க்கப்பட்டது. இப்பகுதி 'கட்புலனாகா நிறமாலை' (இன்விஸிபில் ஸ்பெக்ட்ரம்) எனும் பெயரைப் பெற்றது. கண்ணால் பார்க்கமுடிந்த பகுதி, 'கட்புலனும் நிறமாலை (விஸிபில் ஸ்பெக்ட்ரம்) என அழைக்கப்பட்டது.

அறச் சிவப்பு (இன்ப்ரா ரெட்) அலைகளைப்பற்றி யாராய்வதற்கு, மற்றோர் சாதகமும் கிடைத்தது. அவ்வலைகளின் துணைகொண்டு போட்டோ எடுக்கக் கூடிய ஸ்பெஷல் ப்ளேட்டுகளைத் தயார் செய்ய முடிந்தது. அதனால், கட்புலனாகா நிறமாலை (இன்விஸிபில் ஸ்பெக்ட்ரம்)யை போட்டோ பிடித்துப் பரிசோதிக்க வசதி கிடைத்தது. அறச் சிவப்பு அலை யாராய்ச்சி வலுத்தது. அறச் சிவப்பு போட்டோமுறை (இன்ப்ராரெட் போட்டோக்ராபி) பல வழிகளில் பயன்பட்டது. அதைக்கொண்டு, ஆகாய விமானிகள், நிலமட்டம் மூடுபனியால் போர்க்கப்பட்டிருந்தபோதும், அதை போட்டோ பிடிக்க முடிந்தது. டெலஸ்கோப்புடன் இணைந்த கேமிரா (டெலிபோட்டோ கெமிரா) வில் அறச் சிவப்புக்கானப் ப்ளேட்டுகளைப் போட்டு, வெகு தூரங்களிலுள்ள இடங்களையும் போட்டோ பிடிப்பது சாத்தியமாயிற்று. சாதாரண ஒளியால், மேற் குறித்த போட்டோக்களை எடுக்க முடியாததற்குக் காரணம், வானில் ஏற்படும் ஒளிச் சிதறல். பவனத்தி லுள்ள (அட்மாஸ்பியரிலுள்ள) நுண்ணிய தூள்களால் ஒளி சிதறடிக்கப்படும். இச்சிதறல் (ஸ்கேட்டரிங்) ஒளியின் அலை நீளத்தைப் பொருத்துள்ளது. அலை நீளம் குறைந்த ஒளிகளில் சிதறல் மிக அதிகமாகவும் உள்ளது. எனவே அலை நீளம் குறைந்த ஊதா (வயலட்) போன்ற ஒளிகளில் சிதறல் மிக அதிகமா யிருக்கும். ஆதலால் பவனத்தில் சிவப்பு அலைகளும் அறச் சிவப்பு அலைகளும் அதிகமாயிருக்கும். சாதாரண சமயங்களில் உபயோகிக்கப்படுகின்ற ப்ளேட்டுகள், பச்சை ஒளியைவிட அதிகமான அலை நீளங்களை நன்கு போட்டோ எடுக்காதவை. அவை முக்கியமாய் ஊதா (வயலட்) ஒளியை உபயோகிக்கின்றன. ஆதலால் அவற்றிற்கு ஏற்றதான ஒளி வானில் மிகவும் குறைந்து விடுகின்றது. அறச் சிவப்புக்கென 'ஸ்பெஷ'லாய் செய்யப்பட்ட ப்ளேட்கள், பவனத்தில் மிகுந்திருக்கும் சிவப்பு, அறச் சிவப்பு அலைகளைக் கொண்டு, தெளிவான போட்டோக்களைத் தருகின்றன. அறச் சிவப்பான அலைகளைப் பற்றி ஆராய்ச்சிகள் மேலும் மேலும் செய்யப்பட்டதினின்று, நாம் இப்பொழுது 1/25 அங்குல அலை நீள நீளமுள்ள அறச் சிவப்பு அலைகளையும் பெற்றுள்ளோம். எனவே, அறச் சிவப்பு அலைகள் 1/30,000 அங்குலத்தினின்று 1/25 அங்குலம் வரையிலுள்ள அலை நீளங்களுடன் இருக்கின்றன. இவ்வாறு, சிவப்பு வாட்டமாய், நிறமாலை (ஸ்பெக்ட்ரம்) நீண்டது.

அறச்சிவப்பு அலைகளைப் பற்றின ஆராய்ச்சிகள் நடந்து வந்த காலத்திலேயே, ஒளி (எலக்ட்ரோ மாக்னடிக்) மின்-காந்த இயலானது எனப் பல ஆராய்ச்சிகளின் விளைவாய், காட்டப்பட்டது. மின்காந்த இயக்கத்தால் (எலக்ட்ரோ மாக்னடிக் இண்டக்ஷனால்) விளைந்த ஒலி பரப்பு அலைகளும் (ரேடியோ வேவ்ஸ்) கண்டு பிடிக்கப்பட்டன. மின்-காந்த அலைகள் சாதாரணமாய்ப் பல அடிகள் நீளமானவை. ஆனாலும், மிகுந்த பிரயாசையுடன் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளால் 1/25 அங்குலமே நீளமுள்ள ஒலி பரப்பு (ரேடியோ) சிற்றலையையும் உண்டாக்க முடிந்தது. இவையும் அறச் சிவப்பு ஆராய்ச்சிகளில் கிடைத்த 1/25 அங்குல நீளமான அலைகளை ஒத்திருந்தன. இதனால், மின்காந்த அலைகளும் சூட்டலைகளும், ஒளியலைகளும் யாவும் மின்காந்த இயலானவையே என்று ஏற்பட்டது. சூட்டலைகளும் மின்காந்த அலைகளும் தொடர்ச்சியாய் அமைந்தன. இப்பொழுது இருபது மைல்கள் நீளமான ஒலிபரப்பு அலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மின்காந்தவியலே எல்லா அலை

களுக்கும் அடிப்படையாயுள்ளமையின், ஒளிநிறமாலை, இப்பொழுது, மின்காந்த அலைமாலை (எலக்ட்ரோ மாக்னடிக் ஸ்பெக்டரம்)யாய் விரிவடைந்தது. இப் பக்கமாய் அலைநீளங்கள் அதிகமாய்க் கொண்டே போகின்றன.

சிவப்பு வட்டமாய் அலைமாலை(ஸ்பெக்டரம்) மிகவும் நீண்டுவிட்டது. இப்பொழுது நிறமாலையின் (ஸ்பெக்டரத்தின்) ஊதா (வயலட்) பக்கத்திற்கு திரும்பிச் செல்வோம். ஊதாவுக்கு அப்பாலும் கட்புலனாகாத அலைகள் இருக்கின்றனவெனத் தெரிந்தது. அவை ஸ்பெஷலாய் தயாரிக்கப்பட்ட போட்டோ ப்ளேட்டுகளால் புலனாயின. அவை 'அப்பால் ஊதாக்கதிர்கள்' (அல்ட்ரா வயலட் ரேஸ்) என்று பெயர் பெற்றவையாயின. அக்கதிர்கள் வைத்திய சிகிச்சையில் மிகுந்த பலனைத் தந்துள்ளன என்பதை நாமெல்லோரும் அறிவோம். 'அப்பால் - ஊதாக்கதிர்கள் - சிகிச்சை முறை' (அல்ட்ரா வயலட் ரே ட்ரீட்மெண்ட்), இப்பொழுது வைத்திய சாஸ்திரத்திற்குள் நுழைந்து விட்டது. மேலும், அப்பால் ஊதாக்கதிர்கள், வைத்திய சாஸ்திரம், இயற்கை விஞ்ஞான சாஸ்திரம் (நேச்சுரல் ஸயன்ஸ்) என்பவற்றின் பாற்பட்ட ஆராய்ச்சிகளுக்கும் மிகவும் சாதகத்தை யளித்துள்ளன. அந்நூல்களில், சிறிய வஸ்துக்களை பெரிதாக்கிக் காட்டும் மைக்ராஸ்கோப் என்ற கருவியே, வியாதி முதலியவற்றிற்குக் காரணமானவற்றைப்பற்றி அறிய மிகவும் உபயோகிக்கப்படுகின்றது. ஆனால் கண்ணால் உணரக்கூடியதான ஒளியின் அலைநீளம் 1/60,000 அங்குலமே என நாம் அறிவோம். ஆகையால் 1/60,000 அங்குலத்தைவிடச் சிறிதான வஸ்துவை மைக்ரோஸ்கோப்பினாலும் பார்க்கமுடியாது. ஆனால், 1/60,000 அங்குலத்தைவிடக்குறைந்த அலைநீளமுள்ள அப்பால்-ஊதா (அல்ட்ரா வயலட்) ஒளியைக் கொண்டு, அவற்றை போட்டோ பிடிக்கலாம். இம்முறையை அனுசரித்த கருவிக்கு 'அல்ட்ரா மைக்ராஸ்கோப்' என்று பெயர். இதைக் கொண்டு பல வியாதிகளுக்குக் காரணமான மிக மிகச் சிறிய கிருமிகளான 'பேக்டீரியா' என்பவற்றை போட்டோ பிடிக்க முடிந்தது. 'பேக்டீரியா'க்களைப் பற்றி யறிந்தமையின் அவற்றால் ஏற்படுகின்ற நோய்களைப்பற்றியும் அறிந்து, அவ்வியாதிகளைக் குணப்படுத்தும் சிகிச்சை முறைகளையும் கண்டுபிடிக்க முடிந்தது. சாதாரண மைக்ராஸ்கோப் கொண்டு 20,000 மடங்கு உருப் பெருக்கம் (மாக்னிபிகேஷன்) பெறலாம். 'அல்ட்ரா மைக்ராஸ்கோப்'பால், 80,000 மடங்கு உருப்பெருக்கம் (மாக்னிபிகேஷன்)பெறலாம். இவ்வாறான அப்பால் ஊதா (அல்ட்ராவயலட்) அலைகள் 1/60,000 அங்குல நீளத்தினின்று, குறுகிக்கொண்டே சென்று, 1/250,000 அங்குல நீளமே வரையிலும் உள்ளன.

மின்சாரத் துறையில் பெருகிட்ட விரைவான முன்னேற்றத்தின் பலன்களிலொன்றாய், 'எக்ஸ்' கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எக்ஸ் கதிர்களைப் பற்றித் தெரியாதவர் எவரேனும் தற்காலத்தில் உளரோ? வைத்தியத்திலும், கைத்தொழிலிலும் (இண்டஸ்ட்ரீஸ்களிலும்) அவை பல அபிவிருத்திகளுக்குக் காரணமானவையாயுள்ளன. விஞ்ஞானத்திலும், பதார்த்தங்களின் (மேட்டரின்) உள்ளமைப்பைப்பற்றிப் பரிசோதிக்க, எக்ஸ் கதிர்கள் கைகண்ட ஆயுதங்களாயுள்ளன. 1/250,000 அங்குலம் முதல் 1/25,000,000 அங்குலம் வரையான அலை நீளமுள்ள எக்ஸ் கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இரேடியம்என்னும் சுயம்பிரகாசமான அடிப்பொருள் (எலிமெண்ட்), அதனுடன் கலந்திருந்த இதர பதார்த்தங்களினின்று தனியாய்ப் பிரித்தெடுக்கப்பட்டது. இரேடியம் ஓயாது பலவகையான கதிர்களை வீசிக்கொண்டிருக்கும் இயல்பானது. அது பரப்பும் கதிர்களில் ஒரு வகையானவை 'காமா'கதிர்கள் என்பவை. அவை, 1/25,000,000 அங்குலம் முதல் 1/3,000,000,000 அங்குலம் வரையான நீளங்களுள்ள அலைகளாலானவை. இவ்வுலகிலுள்ளவற்றினின்று

# விளையும் பயிர்

[டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல் ஐ. எம்.]

## அத்தியாயம் 5

சுந்தரமய்யர் தலையூர்வாஸியில்லை. பாலியம் முதல் பல ஊர்களில் திரிந்து வாழ்க்கையில் அடிபட்டுத் தேர்ந்தவர். ஒன்றன்பின்னொன்றாக தோன்றிய கஷ்டங்களும் ஏமாற்றங்களும் அவரை ஒரு கர்மயோகியாகச்செய்து விட்டன. இரும்பைப் பதப்படுத்த நெருப்பில்காய்ச்சிக் காய்ச்சித் தட்டுவது போலவே வாழ்க்கையைப் பதப்படுத்தக் கஷ்டங்களும் ஏமாற்றங்களும் அமைகின்றன போலும். இவருக்கு அந்திய காலத்தில் நகரங்களில் ஜீவனம் நடத்த வசதிகள் ஏற்படவில்லை. ஆகவே தெரிந்த தொழில்களை சமயோசிதம்போல் பற்பலக் கிராமங்களிலும் செய்து வாழத் தலைப்பட்டார்.

பலகாலம் பிள்ளைப்பேறற்றவருக்கு இச்சந்தர்ப்பத்தில் அனந்தராமன் என்ற மகன் பிறந்தான். "விளையும் பயிர் முளையிலே" என்று குழந்தையைப் பார்த்தவர்களெல்லாம் சிலாகித்துப் பேசினார்கள். தன் ஒரே புத்திரனுக்கு நல்ல படிப்பையும் சௌகரியங்களையும் கொடுக்கத் தனக்கு வசதிகளில்லையே என்று சுந்தரமய்யர் ஏக்கமடையவில்லை. அங்கங்கே தங்கின ஊர்களிலெல்லாம் கிடைத்த சௌகரியங்களைக் கொண்டு அனந்த

---

இதைவிடச் சிறிதான அலைகளைப் பெற முடியாது.

இவ்வுலகில் உற்பத்தியாகாத கதிர்களின் சின்னங்கள், உலகின் பல பாகங்களில் காணப்பட்டன. அவற்றைப் பற்றி, மேலும், ஆராய்ந்ததினின்று அவ்வாறு உலகிற்கு வெளியேயிருந்து வரும் கதிர்கள் இருப்பது நிச்சயமேயென ஏற்பட்டது. எங்கும் வியாபித்துள்ள ஆகாசத்தில் அல்லது விசும்பில் உற்பத்தியான இக்கதிர்கள், விசுவோற்பத்தியானவை யென்பதைக் குறிக்கும். 'விண்ணியல் கதிர்கள்' (காஸ்மிக் ரேஸ்)என்று பெயர்பெற்றன. அவற்றின் அலை நீளங்கள், 1/3,000,000,000 அங்குல முதல் 1/3,000,000,000,000 வரையுள்ளன.

இவ்வாறு, நிற மாலையின் (ஸ்பெக்டரத்தின்) ஊதா நுனிப்பக்கமாய் அலை நீளங்கள் சிறுத்துக்கொண்டே வருகின்றன.

சிறு அளவினதேயான நிறமாலை இங்ஙனம் பேரளவினதாயிற்று. சிறிது பெரிதாய் வளர்ந்தது. ஒரு பக்கமாய் மேலும் மேலும் சிறிதான அலைகள் கோக்கப்பட்டன. மற்றோர் பக்கமாய் மேலும் மேலும் பெரிதான அலைகள் சேர்க்கப் பட்டன. ஊதாப்புறத்தில், மனித யத்தனத்தால் பெறக்கூடிய அலைகள் காமா கதிர்களுடன் முடிகின்றன. அவற்றைவிடச் சிறியவையான விண்ணியல் கதிர்கள் எங்கிருந்தோ வருகின்றன. சிவப்புப் பக்கமாய் அலைகள் நீண்டு 20 மைல்கள் நீளமான ஒலிபரப்பு அலைகள் மனித யத்தனத்தால் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றைவிடப் பன்மடங்கு நீளமான மின்காந்தவியலான அலைகள் இடி மின்னலுடன் முழங்கும் கடும் புயல்கள்வீசும்போது எழுகின்றனவென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நிறமாலை மின்காந்த வியலான அலைவண்ண மாலையாய் மாண்புற்றது. அதன் இரு கோடிகளிலும் மானிடரால் உண்டாக்கமுடியாத அலைகள் உள்ளன. மின்காந்தவியல் அலைவண்ண நிறமாலை இயற்கை - விஞ்ஞான மார்பில் அலங்காரமாய் விளங்குகின்றது.

ராமன் படிப்பும் தேறிவந்தது. குடும்பக் காரியங்களைச் சரிவர நடத்த வசதியைத் தேடச் சௌகரியமில்லாத பொழுது குழந்தைப் படிப்பிற்கென்று விசேஷ சௌகரியங்களைத் தேடுவது பெரும் பிழை என்றே மதித்துக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைந்தார்.

அனந்தராமன் பன்னிரண்டு வயது பாலகனாக வளர்ந்துவிட்டான். அப்பொழுது அவர்கள் தங்கி இருந்த கஞ்சம்பட்டியில் சுந்தரமய்யர் ஜீவனத்திற்கு வரவரச் சௌகரியக் குறைவுகள் ஏற்பட்டன. இனி ஒருநாளும் அவ்வூரில் மானமாக வாழ முடியாதென்ற நிலையையடைந்துவிட்டார். பலவாறு யோசித்துப் பார்த்தார். பெரிய நகரத்திற்குச் சென்று வியாபாரமோ சேவகா வ்ருத்தியோ துவக்க த்ரவியமும் மனித சகாயமும் இல்லை. சிறுசிறு கைத்தொழில்கள் மூலம் மரியாதையாகக் காலங் கழிக்கக் குக்கிராமங்களில் போதிய ஆதரவும் இல்லை. எஜமானர்களை ஸ்தோத்திரம் செய்து இச்சகம் பேசிப் பிழைத்திருந்தால் இப்பொழுது இவரே ஒரு பெரிய முதலாளியாகி யிருப்பார். ஆகவே ஒருவகையுமறியாமல் மனம்தவித்து அனாதரக்ஷகன் எங்குற்றான் என்றேங்கினார்.

இந்நிலையில் இவர் தமக்கையின் உதவி கிடைத்தது. அவளுடைய பிள்ளை, போட்டிப் பரீக்ஷையில் தேறினதினால் பெருத்த சம்பளத்தில் வடக்கே வெகு தூரத்தில் வேலையிலமர்ந்தான். ஆகவே தன் நிலபுலன்களை மேல்பார்வையிடுவதற்குத் தம்பியை நியமித்தாள். இது பகவான் காட்டிய வழி என்று உவகை பூத்தார் சுந்தரமய்யர்.

தலையூருக்கு வந்த கொஞ்ச காலத்தில் சொந்த ஊர்போல் பழக ஆரம்பித்துவிட்டார். இதுகாறும் இவருக்கு விரோதிகளோ கிடையாது. நெருங்கின சிநேகிதர்களும் கிடையாது. அவ்வித ஆப்தரில்லாக் குறை கணேச சாஸ்திரிகள் கிராமத்தில் குடியேறியதும் விலகிவிட்டது. இவர்களிருவரும் இணைபிரியாத நண்பர்களானார்கள்.

சாஸ்திரிகளின் நட்பே அய்யரவர்களுடைய வாழ்க்கையில் பாலைவனச் சோலையாக விளங்கியது. இச் சத்சங்கத்தின் காரணமாக வாழ்க்கையில் புதிய உத்சாகம் பெற்றுச் சுறுசுறுப்புடனும் பூரிப்புடனும் காரியங்களைச் செய்ய விழைந்தார்.

குழந்தை அனந்தராமனும் சாஸ்திரிகளிடம் பக்தியும் ப்ரியமுங் கொண்டான். இவனுடைய புத்திசாலித் தனத்தைக் கண்டு சாஸ்திரிகளும் மிக ப்ரீதியுற்றார். இவருடைய திண்ணைப் பள்ளிக்கு அனந்தராமனே சட்டாம்பிள்ளை. பற்பல விஷயங்களையும் பகுத்தறிவைப் பெருக்கும் வகையில் சாஸ்திரிகள் போதித்தார்.

'கிராம அமைப்பும் நிர்வாகமும்' என்ற விஷயாலோசனை இப் பாலக னுள்ளத்தில் பெருங் கிளர்ச்சியை யுண்டாக்கிற்று. அடிக்கடி சாஸ்திரிகள் இவ்விஷயங்களைப் பற்றிப் போதிப்பதை ஆவலுடன் கிரகித்தான்.

“கிராமம் என்றால் ஒன்றுபட்ட சமுதாயம். வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வித சாதனங்களையும் தன்னுளடக்கியது. அடிப்படைத் தத்துவங்களை விளக்கிக் காட்டிக் காப்பாற்றிவரும் ஸ்தலம். நகரமோ இவ்வடிப்படைத் தத்துவங்களால் நன்காராயப்பட்டுச் சமைக்கப் பெற்ற பொது ஸ்தலம். நாகரீகத்தின் ப்ரதிநிதியாக இயங்கும் சமுதாயம். தேசமாகிற விருக்ஷத்தில் கிராமங்களாகிய கிளைகளாலே தாங்கப்பட்டு நிற்பவை இலைகள் போன்ற சிறு நகரங்கள். இவைகளின் மத்தியில் எல்லோர் மனத்தையும் கவர மலர்ந் திருக்கும் புஷ்பங்கள் போன்ற பெரிய நகரங்கள். இப்புஷ்பங்கள் பிற்காலத்தில் கனியாக மாறி வித்துக்களை தன்னுள்ளடக்கி நிற்கின்றன. மறுபடியும் தேசத்தை எழுப்ப உதவும் வித்துக்கள் இவை” என்று உபமானங்களுடன் சாஸ்திரிகள் போதிப்பதையே அடிக்கடி சிந்திப்பான்.

தினம் படுக்கும்பொழுதெல்லாம் தலையூர் அனந்தராமனுடைய மனக் கண்களுக்குக் காட்சியளிக்கும். “பல வேறு ஜாதிப் பிரிவுகள்; பல விதமான

பாஷைத் திரிபுகள் ; முரண்படும் பலவித ஆகாரங்கள் ; எண்ணிறந்த தொழிலினு லேற்பட்ட வேற்றுமைகள் ; இவைகளுக் கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் துர் எண்ணங்களும், துர் ஆசைகளும் நிறைந்துள்ள இத்தலையூர் ஒரு கிரா மமா ? ஒன்றுபட்ட சமுதாயமா ? இங்கு ஒற்றுமை எது ? ஒருக்காலும் இதை ஒரு கிராமமென்று சொல்லலாகாது. பல கிராமங்களை ஒரே மணியகாரரின் ஆளு கைக்குட்படுத்தி விழிக்கச் செய்யும் ஒரு பெருஞ் சூழ்ச்சி என்றாலும் தகுமே" என்று முதிர்ந்த அரசியல் தத்துவ ஞானியைப்போல் இச்சிறுவன் எண்ண மிடுவான்.

மறுபடியும் ஏன் சாஸ்திரிகள் இதைக் கிராமமென்றே யடிக்கடிக் குறிப்பிடு கிறார் என்று யோசிப்பான். உடனே அவன் மனத்திரையில் பற்பல காட்சிகள் தோன்றி மறையும். தேர், திருவிழா, கலியாணங்கள், வயல்களில் தண்ணீர் வைக்கிறவர்கள், வாய்க்கால் வெட்டுகிற வர்கள் முதலியவர்கள் ஒரு வரிசை. அடுத்தப்படி துன்பக் காட்சிகளாகிய கடந்த வருஷத்திய வாந்திபேதி, ஏரி கோடிப் போகையில் கரையுடைந்து பிர வாக மெடுத்து நிர்மூலமாகிய குடிசை களின் காட்சி, பக்கத்துக் கிராமத்தார் களுடன் ஏற்படும் வாய்க்கால் சண்டை கள் முதலியன, இவன் மனத்தை உறுத் தும். அந்த வாய்க்கால் சண்டையில் மண்டையுடைந்து ரக்த ப்ரவாகம் ஓடும் பொழுதும் ஆத்திரம் பொங்க வீராப்புப் பேசிச் சண்டையில் முனைந்து நின்ற அப்துல்காதரும் அவன் சகா குண்டு படையாட்சியும் வெகு நேரம் அனந்த ராமனின் மனத்திரையில் காட்சியளித் தார்கள். கோகுலாஷ்டமி யன்று கண் ணன் படத்தை மேள வாத்தியம் முழங்க ஊர்வலமாக எடுத்துவருகையில், எங்கு மசூதி பக்கம் திரும்பி விடுவார்களோ என்று முன்கூட்டியே ஊர்வலத்தை வழி மறித்து குண்டு படையாட்சியின் கன் னத்தில் பட்டென்று அறைந்த அதே அப்துல்காதருக்கு உதவியாகவா இப் படையாட்சி இன்று வாய்க்கால் சண்டை யில் கலந்துகொண்டான் என்று அனந்த ராமன் பிரமித்தான்.

உடனே சாஸ்திரிகள் ஞாபகம் வந் தது. அவர் வீட்டு வாசலில் மருந்திற் காக காத்திருக்கும் ஜனங்கள் எல்லோ ரும் இவ்வாய்க்கால் சண்டையில் வெட் டுப்பழி குத்துப்பழி என்று கலந்து கொண்ட இருதிறத்தார்களுந்தான் என் பதை யுணர்ந்தான். ப்ரதி தினமும் காலையில் அவர் வீட்டில் காத்திருக்கும் பொழுது எவ்வளவு அன்னியோன்யமாக ஒருவருக்கொருவர் யோக க்ஷேமத்தை விசாரித்துக் கொள்கிறார்களென்று ஆச்ச ரிய முற்றான். பளிச்சென்று ஞானோதய மாகிவிட்டது.

தலையூர் கிராமம்தான். அல்ப விஷ யங்களில் அபிப்பிராய பேதம் சகஜம். அடிப்படையான விஷயங்கள் பொது நல னுக்கான விஷயங்கள் என்று வரும் பொழுது எல்லோரும் ஓரினமே. எல் லோரும் இக்கிராமத்தார்களே; இன்னும் சிறிது ஆலோசித்தால், பொதுவில் ஆபத்து ஏற்பட்டால் பல கிராமத்தார் களும் ஓரினமே என்ற தத்துவம் சாஸ் திரிகளின் கைங்கரியத்தினால் நன்கு போதிக்கப்படுவதை யுணர்ந்தான்.

இவ்விதம் அடிப்படை தத்துவ போதம் ஏற்பட்டதும் தூக்கம் கலைந்து விட்டது. உதயத்தை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டே மணிகளை எண் ணிக் கொண்டிருந்தவன் விடியற் காலை யில் அயர்ந்து நித்திரையிலாழ்ந்தான்.

"வேற்றுமையில் ஒற்றுமை, ஒற்றுமை யில் வேற்றுமை? அடிப்படையான ஒற் றுமையின்மீது தீவிரமான வேற்றுமை களுக்கும் சந்தர்ப்பங்களுண்டு. சாஸ்திரி கள் உண்மையை போதிக்கிறார். ஒன்று பட்ட சமுதாயம் சிறிய அளவில் கிரா மம், விரிந்த நிலையில் தேசம். கிராமம் தேசத்தைத் தன்னுள் அடக்கியுள்ளது. ஆலவிருக்ஷம் ஆலின் வித்துள் அடக்கம். விருக்ஷத்தில் எண்ணிறந்த வித்துக்கள். அவ்விதமே தேசத்தில் லக்ஷக்கணக்கான கிராமங்கள்" என்று ஸ்பஷ்டமாக அனந்தராமன் வாயிலிருந்து பிர

சங்கமாரிபோல் சொற்கள் வந்துகொண்டிருந்தன.

"உதித்து வெகு நேரமாகிவிட்டதே; குழந்தாய் எழுந்திரு" என்று பக்ஷமுடன் எழுப்பினார் சுந்தரமய்யர்.

கண்களைக் கசக்கிக் கொண்டே "அப்பா, நேற்று வெகு நேரம் தூக்கம் வரவில்லை. சாஸ்திரிகள் மாமா சொல்லிக்கொடுத்த விஷயங்களையே சிந்தனை செய்துக் கொண்டிருந்தேன். தேசத்திற்கான அடிப்படை தத்துவங்கள் கிராமத்திலேயே இருக்கின்றன என்ற உண்மையை எவ்வளவு அழகாக விளக்கினார், தெரியுமா? விடியற்காலம் கண்ணயர்ந்திருப்பேன். அற்புதமான கனவு. தேசம் பூராவும் சுற்றுப்பிரயாணம். எங்கும் கிராமங்களே. அங்கேயங்கே நகரங்களென்றும் சில பார்த்தேன். நீ போயிருக்கிறாயோ நகரத்திற்கு?" என்று கேட்டான்.

"ஓ, போயிருக்கிறேன், நாழிகையாச்சு, காலைக்கடன்களை முடித்துவா, பேசலாம்."

அனந்தராமன் உடனே படுக்கையை விட்டு எழுந்திருந்து கைகால்களலம்பி பல்தேய்த்து சந்தியாவந்தனம் செய்து வரப் போனான்.

தந்தைக்குப் பேரானந்த மேற்பட்டதென்றே சொல்லலாம். தன் பையன் தத்துவ ஞானியைப்போல் தூக்கத்தில் கூட பேசுகிறதை காதாரக் கேட்ட சுந்தரமய்யர் பூரித்துப் போனார். மேலும் பையன் பேசுவதைக் கேட்கவேண்டுமென்று சபலப்பட்டார். "அனந்தராமா" என்றழைத்தார்.

பையன் அப்பாவின் பக்கலில் வந்து நின்று அவர் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். ஏதோ சொல்ல வாயெடுத்தவர் ஒன்றும் சொல்லாமல் நின்றுவிட்டார். பையனுக்கோ கனவில் கண்ட உள்ள கிளர்ச்சியைச் சொல்லி அரங்கேற்ற வேண்டுமென்ற துடிப்பு. தானே பேசத் தொடங்கினான்.

"அப்பா நீ போயிருக்கிற நகரம் எப்படி இருக்கும்?"

"நம்மூர் பக்கத்திலுள்ள உள்ளக்குறிச்சிக்கு வருகிறாயா, கூட்டிப் போகிறேன்? ஒவ்வொரு வீதியும் நம்மூர் தெருவைப் போல் 4 அல்லது 5 பங்கு நீளம் இருக்கும். 6 அல்லது 7 வீதிகள் ஒன்றையொன்று வெட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக ஓடும். ஒரு தெரு பூராவும் கடைகளே. பழக்கடை, பல சாக்குக் கடை, விறகுக் கடை, மார்வாரிக்கடை, இரும்புக்கடை எல்லாம் இருக்கும்; இத்தெருவில் கள்ளுக்கடை யொன்று தான் குறைச்சல்."

"ஏன் அப்பா அங்குள்ளவர்களெல்லாம் கள்ளே குடிக்கமாட்டார்களா! நம்மூரிலேக்கூடத்தான் கடையில்லை. இருந்தாலும் நம்மூர்ப் பக்கத்திலிருக்கும் காளாங்குறிச்சிக்குப் போய் குடித்துவிட்டு வருகிறார்கள். தேர் திருவிழா முதலியவைகளுக்கும் குடம் குடமாக கள்ளெடுத்து வருகிறார்களே? அங்கிருப்பவர்களும் காளாங்குறிச்சிக்குத்தான் வருவார்களா?"

"இல்லையடா! அந்த ஊரில் நுழையுமிடத்திலேயே ஒரு கள்ளுக்கடை இருக்கிறது. ஊருக்குள்ளே இருந்தால் ஜனங்களுக்குத் தொந்தரவு அதிகம். பெரிய மனிதர்கள் அசிங்கப்படுவார்கள். ஆகவே ஒதுக்குப்புறமாக விருக்கிறது. சாயந்திரத்தில் இந்த கூலிவேலைச் செய்யும் ஜனங்களெல்லாம் அங்கே வந்து நாள் பூராவும் நன்றி கெட்ட எஜமானர்களுக்கும் சூடு சொரணையில்லாத ஜனங்களுக்கும் வயிற்றுப் பிழைப்பிற்காக உழைத்த களைப்புத்தீரவும் அந்த பாபம் விலகவும் ஓர் அபராதமாக காணிக்கைச் செலுத்தித் தாகசாந்தி செய்துக் கொள்ளுவார்கள். குடித்துவிட்டு ஆடுவார்கள், பாடுவார்கள், மயங்கி விழுவார்கள். உணர்வு வந்தவுடன் மடியில் கனமில்லாததால் வீடு திரும்புவார்கள், கால் போதை அரை போதையுடன்."

"ஊரெல்லையில் ஏன் கள்ளுக்கடை இருக்கிறதென்று சொல்லட்டாப்பா!" என்று புது தத்துவம் கண்டவனைப் போல வினவினான் அனந்தராமன்.

சுந்தரமய்யரும் ஆவலுடன் நோக்க, பையன் சொன்னான்.

"கிராமத்து ஜனங்கள் நகரத்திற்குப் போக முயலுகையில் லங்கிணியாட்டம்

இக்கடை குறுக்கிடுகிறது. இவர்களைப் பார்த்து கேட்கிறது. நீங்கள் எல்லாம் நகரத்துக்குப் போய்விட்டால் கிராம தேவதைகளுக்கு பூஜைப் போடுவது நின்றுவிடுமே. இதற்கு என்ன வழி சொல்லுகிறீர்கள்?" நன்றாகச் சம்பாதித்துத் திரும்பி வந்து பூஜை போடுவதாகச் சொல்லுகிறார்கள். இலங்கிணி தினம் பூஜை வேண்டுமென்கிறாள். தினம் கிராமத்திற்கு வரமுடியாதே என்று தயங்குகிறார்கள். உடனே இலங்கிணி ஒரு ஏற்பாட்டைச் சொல்லுகிறாள். அதாவது, தினம் தவறாமல் அம்மனுக்குக் காணிக்கை இலங்கிணியிடம் செலுத்திவிடவேண்டும். அவள் பிரசாதங்களை வழங்கிவிடுவாள். இதற்கு ஒப்புக்கொண்டு நகரத்தில் நுழைந்தவர்கள் தவறாது தினம் இந்த எல்லையம்மனுக்குக் காணிக்கைச் செலுத்துகிறார்கள். சிலர் கிராமத்திற்கே திரும்பிப் போகப் பிரயத்தனப்படும்போது மறுபடியும் இலங்கிணி கேட்கிறாள், அம்மன் காணிக்கைக்கு வழி என்னவென்று. தவறாமல் கிராமத்திலிருந்து கொண்டுவந்து செலுத்துவதாக வாக்குறுதி கொடுக்கிறார்கள். ஆனால் பணம் இல்லாததினால் தவறிவிடுகிறார்கள். உடனே அம்மன் கோபம், நிலத்தில் வேலை செய்யும் குடியானவர்கள் முதலியவர்களுக்கு உடம்பெல்லாம் நோகும்படி செய்கிறது. எஜமானர்களையும் கடுமையாக இருக்கும்படி செய்கிறது. குட்டி இலங்கிணி ஒருத்தியை காளாங்குறிச்சியிலிருப்பது போல் கூடாரம் அடித்துத் தங்க செய்கிறது. உடனே பயந்து ஊர் ஜனங்கள் இங்குவந்து காணிக்கை செலுத்துகிறார்கள்."

இன்னும் என்ன என்ன புது உணர்ச்சிக்களை எல்லாம் கொட்டப்போகிறானென்று ஆச்சரியம் ததும்ப சுந்தரமய்யர் பார்த்துக்கொண்டிருக்கையில் மேலும் சொல்லலுற்றான் பையன். "இப்படி தானப்பா, எனக்குப் படுகிறது. படிப்பும் பகுத்தறிவுமில்லாத இப்பாமர ஜனங்கள் இப்படித்தான் நகரத்தின் சகவாச தோஷத்தால் குடிக்கு அடிமைப்படுகிறார்கள். பெரிய படிப்பாளிகள்கூட இதற்கு விலக்கில்லை. அவர்களுக்கேற்ப நவநாகரிக ஜோடனைகளுடன் காட்சியளிக்கிறாள் பரதேவதை. ஒயின், விஸ்கி, டீ, காபி முதலிய பானங்களால் ப்ரீதியடைந்து விடுகிறாள். இப்படித்தான் படிப்படியாக ஒரே தேவி பல ரூபங்களை எடுத்துத் தடுத்தாட்கொள்ளுகிறாள். ஒவ்வொருவரும் மற்றவர்களின் தெய்வத்தையும் தெய்வ வழிபாட்டையும் இழிவாகக்கருதி இகழத் தொடங்குகிறார்கள்."

பரவசமடைந்திருந்த சுந்தரமய்யருக்குத் திடீரென்று பயம் தோன்றியது. குழந்தையைத் தொட்டுப் பார்த்தார். உடம்பு கொதித்தது. த்ருஷ்டியோ என்னமோ. சன்னி வேகத்தில்தான் பையன் பேசுகிறானோ? அல்லது, இராத் தூக்கமில்லாததால் சூடாகி இருக்குமோ என்று அவர் மனம் குழம்பி இருக்கையிலேயே மேலும் தொடங்கிவிட்டான்.

"நான் பார்த்த நகரத்தை விவரிக்கிறேன் கேளப்பா. பெரிய காரைக் கட்டிடங்கள். வீதிக் கிருபுறமும் மாடி வீடுகள் பல. நடுவில் நடுவில் சற்று ஓட்டுப்பள்ளி வீடுகள். கண்ணுக் கெட்டியவரையிலும் வீட்டைச்சுற்றி அழகிய சுவர்கள், விதவிதமான பூச்சுவேலைகளுடன். சுவருக்கும் வீட்டிற்கும் நடுவில் மரஞ் செடிகள் நந்தவனம்போல. சில பர்லாங்குகள் இம்மாதிரியே. அப்புறம் கொஞ்சதூரம் வீடுகளே இல்லாமல் குறுக்கும் நெடுக்கும் சாலைகள் மட்டும் பலபலவென்று சாந்து வைத்தாப்போல. மறுபடியும் ஒரு தெரு. இதில் ஒவ்வொரு வீட்டிற்கும் முன்புறத்தில் பெரும் கட்டடமும் பின்புறத்தில் ஒரு சிறு குடிசையும். குடிசை வேலைக்காரன் வசிப்பதற்கு; வண்டி ஒன்று மெத்தை தைத்து கூடிட்டு சக்கிரங்களின்மேலேற்றியசோபாமாதிரி. இதை யிழுக்கும் ஆள் குடிசையில் வசிக்கிறான். இன்னும் கொஞ்சதூரம் போனேன். பேரிரைச்சலொன்று கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தேன். மூங்கிற் புதர்களைக் காணோம். பின் எங்கிருந்து சத்தமென்று வியந்தேன். எதிரே ஒரு பெரிய கட்டிடம் தோன்றியது. அதி

விருந்துதான் சப்தம் வந்துகொண்டிருந்தது. திடீரென்று ஒரு சங்கூதியது. அவ்விரைச்சல் அடங்கியது. கட்டிடத்திலுள்ளிருந்து சிறுவர்களும் முதியோர்களும் நடுப்பிராயத்தினருமாக பல பல கூட்டங்கள் ஆட்டு மந்தைகள்போல் வெளியே வந்தன. என் அப்பா அவர்கள் முகத்தில் ஒருவித உணர்ச்சியுமின்றி ஆடுகளைப்போல் இருக்கிறார்கள்?"

குழந்தையின் நிலையை யறியாது ஒன்றும் விளங்காதே கேட்டுக்கொண்டிருந்த தந்தையை இந்தக் கேள்வி சுய நினைவுக்குக் கொண்டுவந்தது. உடனே பையன் திடீரென்று மயங்கி விழுவதைப் பார்த்து பதைபதைப்புடன் வாரி அணைத்துக் கொண்டார்.

(தொடரும்)


## இந்தியன் பாங்க் லாபம்

30-6-44 வரையில் 6 மாதத்தில் இந்தியன் பாங்கிற்கு நிகர லாபம் ரூ. 7,67,033-8-10 கிடைத்திருக்கிறது. கண்டிஞ்செண்ட் நிதிக்குப் பணம் ஒதுக்கியும் இந்த லாபம் கிடைத்திருக்கிறது.

சென்ற வருஷ லாபக் கையிருப்பு ரூ. 48,226-15-5. சேர்த்து மொத்த லாபம் [illegible],15,260-8-3.

இந்த லாபத்தை வருமாறு செலவுசெய்யத் தீர்மானித்திருக்கின்றனர்:

| | |
|---|---|
| 10% தற்காலிக டிவிடெண்டு கொடுக்க | ரூ. 1,45,000-0-0 |
| ரிசர்வ் நிதிக்கு | ரூ. 1,50,000-0-0 |
| (மொத்தம் ரிசர்வ் நிதி ரூ. 32 லட்சம் ஆகிறது) | |
| புதுக் கணக்குக்கு மாற்ற | ரூ. 5,20,260-8-3 |



# உங்கள் தொழிலாளிகளுக்கு நீங்கள் செய்யும் நன்மைகள்



எவ்வளவோ உண்டு. அதில் முக்கியமானவைகளில் ஒன்று அவர்களை இன்ஷ்யூர் செய்வதுதான். அவர்கள் பெறும் ஊதியத்திலிருந்து தாங்களாகவே இன்ஷ்யூர் செய்துகொள்வதை எதிர்பார்க்கமுடியாது. ஆனால் முதலாளிகளாகிய நீங்கள் அவர்கள் பேரில் ஒருமிக்க பாலிஸிகள் எடுத்து, சிறு தொகைகளில் ப்ரீமியம் கட்டி அவர்களுடைய எதிர்கால வாழ்வையும் சந்தோஷமாக இருக்கச் செய்யலாம். அதனால் உங்களிடம் அவர்களுக்கு உள்ள மரியாதையும் அபிமானமும் நீடித்து வரும் என்பதில் சந்தேகமில்லை. அதற்குத் தகுந்தபடி நாங்கள் திட்டங்கள் வகுத்திருக்கிறோம். விவரங்களுக்கு எங்களுக்கு எழுதவும்.

# யுனைடெட் இந்தியா

## பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்


யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்ப்ளனேட் :: மதராஸ்.

## "தன் குற்றமறிதல்"

(56.ம் பக்கத் தொடர்ச்சி)

அறுபது வயது என்ற கால அளவுக்குட்பட்ட ஜீவாத்மாவுக்கு சாஸ்வதத் தோற்றத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டுகிறது. இதன் பயனாக ஜீவாத்மா தன் குற்றங்களை உணர்ந்து நீக்கி பரிசுத்தமாகிறது. உடல் உயிரையும் உயிர் உடலையும் உண்மையாய் நேசிக்க ஆரம்பிக்கிறது. இருகைகளும் தானாகவே கிளம்பி நமஸ்காரம் செய்கிறது. தன்னைத்தானே வணங்கி அந்தரங்க ஆசையைக் கைகூட்டி வைப்பதின் அறிகுறியே நமஸ்கார மெனப்படும். இவ்விதம் உடம்புக்குள் சூக்ஷ்ம பாகங்கள் வேலை செய்வதாக நினைத்து காலையிலும் மாலையிலும் ஐந்து பத்து நிமிடங்கள் நாம் தியான அப்பியாசம் செய்து வந்தால் காலகிரமேண ஆத்ம ஞானமும் பிரம்ம ஞானமும் சித்திக்கும். இத் தியானத்துக்கு ஆசனம், நியமம், நிஷ்டை, ஜபம், தபம், ஒன்றும் வேண்டா. தூக்க மயக்கமின்றி, தூலப் பிரக்ஞை பங்கப்படாமல் ஜாக்கிரதையாய் உடலுள் நடப்பதைக் கவனிக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனைதான் உண்டு. இவ்வப்பியாசத்தை எம்மனிதனும் சுலபமாய் அனுட்டிக்கலாம். இதை பிருக்த ரஹித தாரக ராஜயோகமென்றும் சொல்லலாம். எல்லா யோகங்களுக்கும் மேன்மையான சித்தியை இது அளிக்கும். தாரகமந்திரம், திருமந்திரம், என்பவைகளின் உட்கருத்து இதுவே.




# ஸ்ரீ காமகோடி

**KAMAKOTI** (*A periodical Journal*)

இப்பத்திரிகை கும்பகோணத்தில் தலைமை ஸ்தானத்தைக் கொண்டுள்ள ஸ்ரீ காமகோடி பீடத்திற்கும், அதன் சிஷ்ய கோடிகளுக்கும் மற்றும் பொது மக்களுககும் ஏற்பட்டுள்ள மானிட வாழ்க்கையின் மேல் நோக்குக்குரிய சம்பந்தத்தை வளர்ப்பதையே பணியாகக் கொண்டது.

தரும நூல் முறையான பணிகளை ஒவ்வொரு ஆன்மாவும் நிறைவேற்றி, தானும் வளர்ந்து பீட ஸ்தானத்தின் ஸான்னித்யத்தையும் வளர்த்து, ஆலும் விழுதும்போல் ஒன்றுக்கொன்று பலமாய் நிலை நின்று, உலக ஸேவை புரிவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதைப் பெற விரும்புவோர்கள் சந்தா பணத்திற்கு பதிலாக கீழ்க்கண்ட சேவைகளை செய்தனுப்ப வேண்டும்.

1. பசும் பால் வாங்கியோ அல்லது தம் வீட்டில் கறந்ததைக் கொண்டோ தம் வீட்டிலேயே நெய் உருக்கி வருஷத்தில் ஒருமுறை 16 பலம பார்சல் மூலமாக 'மானேஜர், காமகோடி பத்ரிகை ஆபீஸ், கும்பகோணம்' என்னும் விலாஸத்திற்கு அனுப்பவேண்டியது. இந்நெய் ஸ்ரீ காமகோடி பீட ஸன்னிதானத்தில் விளக்குக்கும், ஸ்ரீ தேவிக்கான ஹோமங்களுக்கும் உபயோகப்படுத்தப்படும்.

2. பிரதி வருஷம் ஒரு வெள்ளிக்கிழமை தமது நண்பர்களிடம் யாசகம் செய்து, கிடைக்கும்தொகை எவ்வளவு சிறியதாயிருப்பினும் பெரியதாயிருப்பினும் அதைமேற்கண்ட விலாஸத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பி வைக்க வேண்டியது.

# க்ளூகோனேட்-D.

## கால்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள் -

*விடமின் D சேர்ந்தது*

✻

**உட்கொள்ளக் கூடிய சாக்லட் வடிவில்**

கர்ப்ப காலத்தில் கால்ஸியம் குறைவு, பலஹீனம், குழந்தைகளுக்கு எலும்பு ஏற்படுவது போன்ற எல்லா சந்தர்ப்பங்களுக்கும் சிபார்சு செய்யப்படுவது

✻

**I. T. L.** *தயாரிப்பு*

---

கவர்ன்மெண்ட் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரடரி

*மல்லேச்வரம்* P. O. :: *பெங்களூர்*

*சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :—*

மெஸர்ஸ் : பெஸ்ட் & கம்பெனி லிமிடெட்.

தபாற் பெட்டி நே. **63,** — மதராஸ்.

# தேவி வழிபாடும் தாய்மொழியைப் பேணுதலும்

**[ துகளன் ]**

சிருங்கார ரஸத்தைத் தமிழ் மக்கள் தெய்வக் காதலாக்கி மேம்படுத்தினர். அகத்துறைப் பாடல்களுக்கு அழியாத நிலை ஏற்பட்டது. இவ்வாறு செந்தமிழைப் பண்படுத்த பாண்டிய நாட்டிலேயே உமாதேவி மீனாக்ஷி என்று பாண்டிய ராஜகுமாரியாக அவதரித்தாள். உலகை யாளுஞ் சக்தி தாய்ச் சக்தியே என்று நிரூபித்தாள். ஈசன் சுந்தரமூர்த்தியாக வந்து அவளைத் திருமணஞ் செய்து கொண்டதைக் கண்ட தமிழ் மக்கள் பெற்றோருக்குப் பரஸ்பரம் இருக்கும் சிருங்கார பூர்த்தியை அவர்களுடைய வாத்ஸல்ய ரஸத்திற்குத் தாயகமாகவே கண்டு களித்தனர். காவிய ரஸிகர்களும் 'இவ்வாறு சிருங்கார ரஸத்தைவாத்ஸல்ய ரஸத்திற்கு வாயிலாகக் கூறுவதே பொருத்தமானது, க்ஷேமகர மானது, மனிதரை மிருகங்களினின்றும் வேறு படுத்தித் தெய்வத் தன்மையுடையவராகச் செய்வது' என்று கண்டுகொண்டனர். காளிதாஸ மஹா கவியும் பரத சக்கிரவர்த்தியின் பெற்றோராகவே துஷ்யந்தனையும் சகுந்தலையையும் நாடகத்திலே அமைத்துக் காட்டுகிறார். தன் குலத்திற்கு ஏற்ற மகனைப் பெறுவதற்காகவே தர்ம மார்க்கத்திலே நிலைபெற்ற தன் மனம் சகுந்தலையை நாடுகின்றது என்று வாய்விட்டுக் கூறுகிறான். பரதனிடமுள்ள வாத்ஸல்யமே பெற்றோர்களை பார்வதீ பரமேசுவரர்களைப்போல ஒன்று சேர்க்கின்றது. இவ்வாறு சிருங்கார ரஸத்தை மேன்மையுற்றதாக்கிய கவிச்சக்கிரவர்த்திகளைப் போலவே, பரம ஞானிகளும் தேவி வழிபாட்டை ஆத்ம ஞானத்திற்கு உபாயமாக விதித்தார்கள். பெண்ணாய்ப் பிறந்தவர்கள் அனைவரையும் தேவியின் மூர்த்தங்களாகப் பாவித்து 'மாத்ரு தேவர்'களாவதே இந்திரிய ஜயத்தைப் பெறுவதற்குச் சாதனம் என்று கண்டுகொண்டனர். தேவியுபாசனை நாட்டிலே நிலைபெற்றுவிட்டது. 'ஜகதேக மாதா'வாக காளிதாஸன் ச்யாமளா தேவியைப் போற்றினான். சங்கர பகவத் பாதர்கள் அந்த அம்பிகைக்கு நவரத்ன மாலையைப் பூட்டி அம்பாஷ்டகத்தால் ஸ்துதித்தார்; ஜ்வரத்தாலுண்டாம் பீடையையும் ஸம்ஸார தாபத்தையும் ஒருங்கே போக்கிக்கொள்வதற்கு அம்பிகையை ஆனந்த வெள்ளம் பெருகுகின்ற வாக்கினால் போற்றிக் காட்டினார். 'பார்வதி தேவியே தாய், மகேசுவரனே பிதா, அடியார் அனைவரும் சுற்றத்தார், மூவுலகும் நமது நாடு' என்று விளக்கும் அன்னபூர்ணாஷ்டகத்தைப் பாடி தேவியார் நமக்கும் ஞானமும் வைராக்கியமும் தருகின்ற அன்னத்தையளிக்குமாறு உதவினார்; ஏழை வீட்டிலே பொன் மழை பெய்யும்படி 'கனகதாராஸ்தவ'த்தால் வேண்டிக்கொண்டார். ஸ்ரீதேவியும் மூவுலகுக்கும் தாயாகிய அம்பிகையே யன்றோ? இந்த ஸ்துதியை தினந்தோறும் செய்பவர்கள் வேதங்களாகிய செல்வத்தைப் பெற்று இங்கேயே ஞானத்தால் ஆனந்த மடைகிறார்கள் என்று உறுதி கூறுகிறார்.

இவ்வாறான ஆறு ஸ்தோத்திரங்களோடு இதர தேவீ பக்தர்கள் இயற்றிய ஸ்துதிகள் ஏழையும் சேர்த்து, 'ஸ்ரீதேவீ ஸ்தோத்ர ரத்னாகரம்' என்னும் நூலாக தமிழ் மொழிபெயர்ப்பு விசேஷக் குறிப்புகள் ஜகத்குரு ஸ்ரீகாமகோடி பீடாதி

# பாரத மணி

(ஒரு மாதப் பத்திரிகை)

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

வருட சந்தா ரூபா 3-0-0 :: தனிப் பிரதி அணா 0-4-0

## சரஸ்வதி பூஜா விசேஷ மலர்

125 பக்கம் : விலை ரூ. 1-0-0

பிரபல எழுத்தாளர்களின் உயர்ந்த கட்டுரைகளும் கதைகளும் வெளி வருகின்றன

பிரதிகளுக்கு இப்பொழுதே ஆர்டர் செய்யவும்.

15-9-44-க்குள் சந்தாதார்களாக சேருகிறவர்களுக்கு சரஸ்வதி பூஜா மலர் சந்தாவுக்கே அனுப்பப்படும்.

பாரதமணிக்கும், எங்கள் பிரசுரங்கள் விற்பனை செய்வதற்கும் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

விவரத்திற்கு : மானேஜர், பாரத மணி,

34, அலமேலு மங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

---

# The Vanguard Insurance Company Ltd.

H. O. 308/309, Linghi Chetty Street, G. T. Madras

## POINTERS OF PROGRESS

❋ Lowest Expense Ratio
❋ Highest Bonus Possibilities
❋ Cent per cent Security to Policy-holders
❋ Excellent terms to Field Workers
❋ Decent return to Share holders

**See whether we satisfy all these requirements.**
**If you are satisfied, Tell others. If not, Tell us.**

Total Investments in Government and other Approved Securities : Rs. 4 lakhs.

H. D. RAJAH,
*General Manager.*

பதிகளான ஸ்ரீமுகம ஆகியவற்றோடு காமகோடி கோசஸ்தானத்தினின்றுவெளிவந்துள்ளது. (விலாஸம்: 4 பிரான்ஸிஸ் ஜோஸெப் தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ். விலை அணு 12). பாண்டிய நாட்டை ஸ்ரீ மீனாக்ஷி தேவியின் நாடாகவும் நாயக்க மன்னரை தேவியின் தாஸனாகவும் பாவித்து, அவரிடம் மந்திரி பதவியை வகித்து, அரிய பகவத் கைங்கர்யங்களைச் செய்து, பின்பு தேவி யுபாஸனையால் ஐம்பொறிகளையும் அடக்கிப் பெற்ற தன் மனத்தூய்மையை எல்லோரும் கண்டு அதிசயிக்குமாறு 'ஆனந்த ஸாகரஸ்தவம்' என்று பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடும் நூலைப் பாடியருளிய பெரியார் 'ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர்' என்பவர். அவ்வரிய நூலையும் அப்பெரியாரின் வமிசத்தைச் சார்ந்தவரான ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகளைக்கொண்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கச்செய்து அப்பெரியாரது சரித்திர விளக்கங்களோடும் நூலின் பெருமைக்கு ஏற்றவாறு அமைந்த ஸ்ரீமுகத்தோடும் மேற்கண்ட கோச ஸ்தானத்திலிருந்து வெளியிட் டிருக்கிறார்கள். (விலை அணு 12).

தமிழ் நாட்டைத் தாயாக உருவகப்படுத்தியதுபோலவே, தமிழ் மொழியையும் தாய்மொழியாகக்கொண்டு தமிழிற்குச் செய்த தொண்டு தேசத் தொண்டாகும், தாய்த் தொண்டுமாகும் என்னும் நோக்கத்தோடு, 'தாய்மொழி மூலமாக அறிவுச் செல்வங்களை வாரி வழங்க வேண்டும்' என்ற அவாவோடு, 'தினமணி வெளியீடுகள்' தொடங்கப் பெற்றுள்ளன. முதல் வெளியீடாக வந்த 'மகாத்மா காந்தி நினைவு மாலை'யை பெண்மைக்கு ஓர் உறையுள்; வீரத்துக்கு ஒரு வைப்பு; காந்தியத்துக்கு ஊற்று' என்பார் திரு.வி.க., தமது முன்னுரையிலே. உலக மக்களையெல்லாம் தம் மக்களாகப் பாவித்து வாத்ஸல்யங்கொண்டு வாழ்ந்த காந்தி தம்பதிகளை ஆசிரியை அம்புஜம்மாள் தாம் தத்துக்கொண்ட பெற்றோராகக் கொண்டதில் அதிசயமில்லை. மஹாத்மாவின் வாழ்க்கை 'கஸ்தூரிபா'வின் பிரிவோடு பூர்த்தியாகிவிட்டது என்று ஒரு வகையிலே கொள்ளலாம். அந்த வகையிலே இந்த நினைவு மாலை அவரது முழு வாழ்க்கையையும் குழந்தைக் கண்களோடு நாம் நேரிற் கண்டது போல் வாசித்துக் கண்டு இன்புறுவதற்கு உதவுகின்றது. ஆசிரியை தம் மனத்திலே தோன்றியவற்றையெல்லாம், தாம் நேரிற் கண்டதையெல்லாம் தம்முடைய வாழ்க்கையானது காந்தி தம்பதிகளின் வாழ்க்கையால் எவ்வாறு பின்னிக்கொண்டது என்பதை யெல்லாம் உள்ளதை உள்ளவாறு கூறும் சிறு பிள்ளையைப் போல் அமைத்துள்ளது இந்நூலை சிறந்ததோர் இலக்கியமாகச் செய்கின்றது.

'வாழ்க்கையே கலை' என்று கொண்டவர் காந்திஜி என்றால் 'ஆயிரம் பிறை கண்ட' கவிஞரான ரவீந்திரர் 'கலையே வாழ்க்கை' என்று வாழ்ந்தவர். கவியின் உண்மை நிலையை ரஸிகர் தாம் கண்டு ஆனந்திக்க இயலும் என்று ஸ்ரீ. வேங்கடரமணி முன்னுரையின் கூறியதற்கு ஏற்றவாறு, ஆங்கிலம், வடமொழி, தென்மொழி ஆகிய மும்மொழியோடு இன்னிசையாகிய எழுத்திலா மொழியிலும் பயிற்சிபெற்ற ரஸிகர் ஸ்ரீ கி. சந்திரசேகரன் டாகுரின் வாழ்க்கையையும் கவிதையையும் நமக்கு விளங்கச் செய்கிறார். கலைவாணரின் உள்ளக் கிடக்கையெல்லாம் நமக்கு வெட்ட வெளிச்சமாகின்றது. (1) 'தம் இனத்தைச் சார்ந்தவர்கள் பகுத்தறிவோடு கூறும் பாராட்டு மொழிகளே நோபெல் பரிசுக்கும் மேலானது; இவ்வகைப் பாராட்டு உருவாகாத கவிதையையும் உயிர்பெறச் செய்யும்; (செத்துப் பிறந்த பரீக்ஷித்தை கிருஷ்ண பகவான் பாராட்டிப் பரிசித்தருளியதைப் போல) (2) வேறு பாஷையினால் கவிதையை வளர்ப்பது காதலியை மணக்க வேறொருவரை அனுப்புவது போலே தான். (3) நாடகத்தின் இடையே எவ்வளவோ வித உலக இயல்புகளையும் அவைகளை நீக்கி விமோசனம் அடைய வேண்டிய மார்க்கங்களையும் போதித்திருக்கிறார். இவையெல்லாம் கவிஞர்களுக்கு மட்டுமே உள்ள சுதந்திரம், அவர்கள்

உலகை உள்ளே நின்று பார்த்தும் வெளியே நின்று நிராகரித்தும் உள்ளார்கள் (4) வறுமை 'சரீரத்திற்கு வேண்டிய பாதுகாப்பைக் குறைத்து அதனால் மன வேதனையை' உண்டாகுகின்றது'; செல்வமோ 'மன வேதனையினால், ஒருவருக்கு எவ்வளவு சுகங்கள் இருப்பினும் அவைகளை உடம்பில் ஒட்டாமல் செய்து தேக ஆரோக்கியத்தையும் சிதைய வைக்கின்றது. (5) கவிஞருடைய தர்மம் பேனாவைக் கையிலேந்தி நிறுத்தாமல் கடைசிவரையில் எழுதுவதே....ஆகையால் ரவீந்திரர் மனம் தளராமல் தம் காரியத்திலேயே முழுகியிருந்தார். மகாத்மாவும் தம்முடைய செயலில் ஈடுபட்டிருக்கிறார். அவரவர் செய்யும் செயல் அவரவர் பிறந்த காரியத்திற்காக அல்லவா? (6) எழுதத் தெரிந்துகொண்டானாயின், தாய்ப்பாஷையிலுள்ள பலவிதச் சௌகரியங்களும், சுபாவமான அம்சங்களும், எவ்வளவு பயின்றவனுக்கும் மற்றமொழியில் உண்டாகாது. (7) இயற்கையைக் கேவலம் கலையில் நகல் செய்வது நியாயமில்லை; கலையின் உயர்நோக்கம் அது அல்ல; கலையின் காரியம் யாதெனின், இயற்கையிலுள்ள சூக்ஷ்மங்களை அலசிப் பிறருக்கு எடுத்துக் காட்டுவதாம். (8) ஒருவருடைய சொந்தப் பாஷையில் கல்விப் போதனையைப் பெறுவது, தேக ஆரோக்கியத்தின் பொருட்டு உணவுப் பண்டங்களைச் சொந்தப் பற்களினால் கடித்து மென்று விழுங்கி அவ்வவர் ஜீர்ணக் கருவிளால் உடம்பு ரத்தத்தில் சேர வைத்துக்கொள்வதற்குச் சமமானது.' (9) பிரவிர்த்தியில் ஈடுபடுபவனே நிவிர்த்தி மார்க்கத்தைப் பிடித்துக் கொள்ளத் தகுந்தவனாகிறான்; ஒன்றுமே செய்யாவிடில் நிவிர்த்திக்கு உவந்த மனப்பாங்கு எவ்விதம் விளையக்கூடும்?

இவ்வாறெல்லாம் தெள்ளத் தெளிய வாழ்க்கையையும் கவிதையையும் விமர்சனம்செய்யும் இவர் 'கவிதையை அனுபவிப்பதுஎப்படி' என்று உணர்த்துவதைக் கவனிக்கவேண்டும்: 'ஒரு சாரார் மட்டுமே கவியைக் கண்டதும், உள்ளம் அதில் ஊன்றி வாய்ச்சொல்லும் விளக்காத




இந்தப் பையன் தன் தாய் நாட்டிலும் அயல் நாட்டிலும் சிறந்த கல்வியைப் பெற்று இன்று வாழ்க்கையில் மிக உயர்ந்த பதவியை அடைந்திருக்கிறான். இதற்கு சாத்தியமாக இருந்ததற்குக் காரணம் அவன் தகப்பனார் தீர்க்க தரிசனத்துடன் அவனுக்கு வேண்டிய அளவு கல்வி மற்றும் ஆயுள் இன்ஷூரன்ஸ் மூலம் ஏற்பாடுகள் செய்திருந்ததுதான்.

**உங்கள் பையன் விஷயமாக என்ன செய்திருக்கிறீர்கள்?**

விவரங்களுக்கு:

**நேஷனல்**

**இன்ஷூரன்ஸ் கோ., லிட்.**

நெருப்பு, விபத்து, மோட்டார்; கப்பல் மற்றும் பல இதர இன்ஷூரன்ஸ் திட்டங்களுக்கு

**நேஷனல் பயர் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கோ., லிட்.**

7, கௌன்ஸில் ஹவுஸ் தெரு — கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:

'நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்'

362, சைனா பஜார் ரோட்—எஸ்ப்ளனேட்

சப் - ஆபீஸ்கள்: பெங்களூர் & மதுரை

அறிவொன்றைக் கவிஞன் தெள்ளத் தெளிய, சப்த மயமான பதங்களில் புகுத்தி யிருப்பதைக் கண்டு கணநேரம் தங்களையே மறந்திருப்பார்கள்'; ஒரு சாரார் மட்டுமே யல்லாது மக்கள் அனை வரும் கவிதையை இவ்வாறு மெய்மறந்து அனுபவிக்கும் நாளை நனவாக்குவதற்கு இந்நூலைப் படித்துப் பயன் பெறுவதே சிறந்த உபாயமாகும்.

'உன்னைத் துண்டு துண்டாக வெட்டிக் காக்காய்க்கு இடுகிறேன்' என்று பயமுறுத்துகிறோமே, இந்த வசனம் எவ்வாறு எழுந்தது? என்பதை அறிய வேண்டுமானல் 'கைலாஸம் – மானஸ ரோவர்' என்னும் நூலைப் படித்துப் பாருங்கள். இமய மலையில் கைலாஸ பர்வதத் தருகிலே விறகு கிடையாதாம்; அதனல் அங்கே செத்தவரைச் சாவாதவர் துண்டு துண்டாக வெட்டிக் காக்காய்க்கு இடுகிறார்களாம். நாம் எல்லாம் கைலாஸத்திற்குப் போய்வந்தால் எவ்வளவு பெருமையோடு பொய்யோடு சிறிது மெய்யும் கலந்து பேசுவோம்; நம்மைப் போன்றவர் அல்லர் எஸ். வேதாந்தம். குமாஸ்தா காட் குறிப்பை எழுதுவதுபோல் அவ்வளவு துல்லியமாகத் தாம் இரண்டு ஸ்திரீகளுக்குத் துணையாக மானஸரோவரைக் காண்பதற்கும் கைலாஸத்தைப் பரிக்ரமஞ் செய்வதற்கும் போய் வந்ததைக் குறிப்பிடுகிறார். என்ன சொற்செட்டு! ஆரம்பத்திலே 'ஹா, ஹா' என்று தொடங்கி விட்டால் கைலாஸக் காட்சி இப்படி வர்ணிக்க இயலுமா? "இன்றைக்குக் கைலாஸ மலை தனக்கு இயற்கையான சகல தேஜஸோடும் காட்சி தந்தது. வெள்ளி மயமான சிகரத்தின் மேலே ஒரு பொன் விதானம் கவிந்து பூலோகத்தை ஆளுவது போலிருந்தது! கைலாஸ கிரி, மண்டபங்களும் பிராகாரங்களும் கர்ப்பக்கிருகங்களுமாய்த் திகழும் தென்னாட்டுத் திருக்கோயில்களின் லக்ஷ்ய வடிவமாகக் (Archetype) தோன்றுகிறது. இது ஓர் இயற்கைத் திருக்கோயில்." "அதிகாலையில் எழுந்தோம். காணக் கிடையாத காட்சி! எல்லாம் வெண்மை! எங்கும் ஒரே வெண்மை! இரு குன்றுகளாகிய துவார பாலர்களுக்கிடையே கைலாஸகிரி மிகப் பெரியதொரு பீடத்தின்மேல் கவிந்த விமானம்போல் ஒரே வெள்ளிமயமாய்த் திகழ்ந்தது. இந்தக் காட்சியைக் கண்டதும் பட்ட சிரமங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோலப் பறந்துவிட்டன. சென்ற பகலெல்லாம் ஆகாரமில்லையே, ஆனலும் களைப்பு உண்டா? இந்தத் தெய்வ அழகிலே லயித்திருந்த எங்களுக்குச் சாப்பாட்டின் நினைவுதான் உண்டா?" அங்குச் செல்லும் அவாந்தர வெளியிலே மோனம் குடிகொண்டிருந்ததாம்: 'எங்கும் ஓங்கார நாதம்போல் ஒருவகை இன்னிசை ஊடுருவிக் கிடப்பதாக உணர்ந்தோம்; இந்த உணர்ச்சிகளை விரித்துரைப்பது இயலாது' என்கிறார்.

எப்பேர்ப்பட்ட கற்பனைகளை யெல்லாம் அலையலையாக எழுப்பவல்லது மானஸரஸ் என்று கூறி 'காலை முதல் 15 மைல் பிரயாணம் செய்து களைத்து வந்தோம் இந்தப் புண்ணிய தீர்த்தத்திற்கு. கரையிலே கால் வைத்ததும் மெய்சிலிர்த்தது. எங்களை அறியாமலே களைப்பெல்லாம் எங்கேயோ பறந்து விட்டது. பளிங்கு போலத் தெள்ளத் தெளிந்த நீரிலே நிம்மதியாக நீந்திச் சென்றன வெண்மையான ராஜஹம்ஸங்கள். மொழுமொழு என்றிருக்கும் கூழாங்கற்களின் வர்ண ஜாலங்களையும் வடிவங்களையும் தான் என்னென்பது?'

இன்று ஸ்ரீஜயந்தி. போன ஸ்ரீஜயந்தி யன்று ஸ்ரீ வேதாந்தம் கைலாஸக் காட்சியைக் கண்டு திரும்பும் வழியிலே, ஸ்திரீகள் கிருஷ்ணபஜனை செய்வதைப் பார்த்தாராம்; அன்றெல்லாம், பெண்கள் கூடிக் கும்மி அடிப்பது சர்வ சாதாரணக் காட்சியாக இருந்தாராம்; பண்டிகை நாளாகையால் அங்குள்ள கடைக்காரன் அவர்களுக்குத் தேவையான காய்கள்,

பால், தயிர் எல்லாம் தந்தும் அவற்றிற்குக் கிரயம் வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டானும். அதைப் போலவே, இவரும் நமக்கு யாதொரு சிரமமும் பணச் செலவுமின்றி, நம் வீட்டிலிருந்தபடியே காணும்படியாக, அப்பர்ஸ்வாமிக்குக் கைலாஸநாதன் திருவையாற்றிலே கைலாஸக் காட்சியை அளித்ததுபோல, உதவுகிறார்.

கிருத யுகத்தையும் கவிதாலோகத்தையும் நனவாக்க முயன்ற பெரியார்களைப் பற்றித் தெரிந்துகொள்ள உதவிய தினமணி வெளியீடு, மானஸஸரஸையும் கைலையங்கிரியையும் யாத்திரைசெய்து கண்டுகொண்டவரின் கண்களாற் காண உதவியதும் பொருத்தமே! ஒவ்வொன்றும் விலை அணு எட்டுத் தான்.


# விவாஹம்

பிராமணர்கள், இதர ஹிந்துக்கள், மற்றவர்கள், விவாக ஸம்பந்தமான எல்லா சமாசாரங்களையும் நேரிலோ, எழுத்து மூலமோ தெரிவித்துக் கொள்ளலாம், கேட்டும் கொள்ளலாம். விவாஹமே மனிதர்களுக்கு முக்கிய ஸம்ஸ்காரம், அது காலத்தில் செய்யப்பட வேண்டியது இன்னும் விசேஷம்.

**பிராமண விவாஹஸபா,**

289, தம்பு செட்டி தெரு, மதராஸ்.

---

# ஆர்யதர்மம்

நமது புண்ணிய பாரத நாட்டின் தர்மத்துக்கு தொண்டு புரியும் தமிழ் வாரப் பத்திரிகை வருஷ சந்தா ரூபா 3-8-0.

மானேஜர்: **ஆர்யதர்மம்**, கும்பகோணம்.

---

# காமகோடி கோசஸ்தானம்

உண்மையான ஹிந்து மதத்தையும் நாகரிகத்தையும் நாட்டில் பரவச் செய்யும் காரியத்தில் ஈடுபட்டு, ஹிந்து தத்துவங்களிலும் மத உண்மைகளிலும் உள்ள உயர்ந்த லக்ஷியங்களை எல்லோரும் அறியும் பொருட்டு உயர்ந்த ஸம்ஸ்கிருத ஸ்தோத்திர நூல்களைத் தமிழிலே உரை, கருத்துரை, மொழிப்புரைகளுடனே பிரசுரிப்பதை நோக்கமாகக் கொண்டது. ஜீவ்ய லக்ஷியங்களை நிறைவேற்றுவதற்கான வழிகளை எடுத்துக்காட்டும் நூல் நிலையம் புஸ்தகங்கள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு எழுதி தெரிந்துகொள்ள வேண்டிய விலாஸம்.

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி,**

காமகோடி கோசஸ்தான புஸ்தகங்களைப் பிரசுரம் செய்பவர்கள்

4, ப்ரான்ஸிஸ் ஜோஸப் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

# மாத நிகழ்ச்சிக் குறிப்பு

## இந்தியாவில்

### ஜூலை

**14.** ஆகஸ்ட் தீர்மானத்துக்கும் 'தம் முடைய சமரஸத் திட்டத்துக்கும் முரண்பாடில்லை என்று மகாத்மா அறி வித்தார்.

**15.** இந்திய ஸிவில் சர்வீஸ் உத்தியோ கங்களுக்கு ஐரோப்பிய ராணுவத்தினர் நியமன அறிக்கை.

**16.** பக்கம்-விலை குறித்த பத்திரிகை கட்டுப்பாடு ரத்து.

**17.** வங்கத்தில் மீண்டும் பஞ்சம் தலை தூக்குவதாக கல்கத்தா மேயர் எச்சரிக்கை.

**18.** அண்ணாமலை ஸர்வ கலாசாலை திருத்த சட்டத்துக்கு வைஸிராய் அங்கீ கார மறுப்பு.

**20.** இந்திய விடுதலைக் கோரிக்கையை மாஜி யு. எஸ். உதவி ராஜாங்க காரிய தரிசி ஸம்னெர் வெல்ஸ் ஆதரிக்கிறார்.

**25.** நிலபராதீன மசோதாமீது சிந்து சர்க்காரில் பிளவு. காமன்ஸில் இந்தியா விவாதம்.

**26.** சென்னை நீதிபதி ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பதவியி லிருந்து விலகினார்.

**27.** புதிய ஸ்ரீமூலம் அசெம்பிளியின் முதல் கூட்டம்.

**28.** அளகப்பா தொழிற் கல்லூரி திறப்பு விழா.

**30.** லீக் காரிய கமிட்டி கூட்டம்; கஸ்தூரி பாய் நிதிக்காக எம். எஸ். சுப்புலக்ஷ்மி கச்சேரி ரூ. 13,000 வசூல்.

**31.** வடமேற்கு ரயில்வேயில் குமாஸ் தாக்கள் ஸ்டிரைக்.

காந்திஜியுடன் சம்பாஷணை நடத்த ஜின்னாவுக்கு ஸர்வாதிகாரம்.

காந்திஜி பஞ்சகனியிலிருந்து பூனா வுக்குப் புறப்பட்டார்.

### ஆகஸ்டு

**1.** ராவ் கமிட்டி (ஹிந்து சட்டம்) சிபார்சுகள் பிரசுரம்.

**2.** காந்திஜி வர்தா புறப்பாடு.

**7.** ஸி. ஆர். திட்டத்தை எதிர்த்து மகா கனம் சாஸ்திரி அறிக்கை.

புது மாகாண கடன் வெளியீடுகள்.

**9.** சென்னை மாகாணத் தொழிற்சங்க காங்கிரஸ் மகா நாட்டுக்குத் தடை.

தேசமெங்கும் ஆகஸ்ட் 9உ கொண் டாட்டம்.

சப்ரூ - காந்தி சம்பாஷணை.

**17.** காந்திஜியின் சமரஸ திட்டத்தை வைஸிராய் நிராகரித்தார்.

## உலகச் செய்திகள்

### ஜூலை

**21.** ஹிட்லரை கொல்ல ராணுவத்தி னர் முயற்சி.

ஜப்பானில் டோஜோ மந்திரி சபை ராஜீநாமா.

**22.** கொய்ஸோ ஜப்பானின் பிரதம மந்திரியாகிறார்.

23. ஜப்பானிய யுத்தக் கொள்கை மாறுதென அறிவிப்பு.

24. 1944 இறுதிக்குள் யு. எஸ். கடற்படையின் ஆள் பலத்தை 32 லக்ஷமாக உயர்த்த உத்தரவு.

மாஸ்கோவின் ஆதரவுடன் போலந்தில் அமைக்கப்பட்ட விடுதலைக் கமிட்டியை லண்டனிலுள்ள போலிஷ் சர்க்கார் நிராகரித்தது.

25. ஜெர்மனியில் பரிபூர்ண படை திரட்டல் முஸ்தீபு.

26. மாஜி ஈரான் மன்னர் ராஜாகான் பெஹ்லவி தென்ஆப்ரிக்காவில் மாண்டார்.

27. போலிஷ் பிரதம மந்திரி ஸ்டாலினைக் காண மாஸ்கோ சென்றார்.

28. இந்தியர்களுடன் விவாதிக்க ஜெனரல் ஸ்மட்ஸ் டர்பான் வந்தார்.

### ஆகஸ்டு

2. துருக்கி-ஜெர்மனி ஸ்தானிக வர்த்தக உறவு ரத்து.

பின்னிஷ் பிரெஸிடெண்ட் விலகினர்.

5. போலிஷ் பிரதமர் ஸ்டாலினைக் கண்டார்.

வார்ஸாவில் போலிஷ் தேசபக்தர்களின் கலகம்.

7. பிரிட்டிஷ் - அமெரிக்க எண்ணெ உடன்பாடு.

## போர் முனைகள்

### ரஷ்யா – ஜெர்மனி

#### ஜூலை

14. பின்ஸ்க் செஞ்சேனை வசமாயிற்று.

16. குரோட்னே பிடிபட்டது.

21. ஆஸ்ட்ராவ் வீழ்ந்தது.

23. பிஸ்காவ் வீழ்ந்தது.

24. லப்லின் ரஷியர் வசம்.

26. நார்வா ”

27. லுவாவ் ”

28. பிரெஸ்ட்லிடாவ்ஸ்க், பியாலிஸ்டாக் வீழ்ந்தன.

#### ஆகஸ்டு

2. தெற்கு பின்லாந்திலிருந்து ஜெர்மனியர் வெளியேற்றம்.

5. கிழக்குப் பிரஷ்யாவுக்குள் ரஷ்யர் பிரவேசம்.

7. கோவ்னே வீழ்ந்தது.

### மேற்கு ஐரோப்பாவில்

#### ஜூலை

18. நார்மண்டியில் ஸெயின்ட்லோ வீழ்ந்தது.

29. குடான்சிஸ் வீழ்ந்தது.

31. கிரான்வில் வீழ்ந்தது.

#### ஆகஸ்டு

2. பிரிட்டானியில் வேகமான அமெரிக்க முன்னேற்றம்.

15. தெற்கு பிரான்சில் நேச படையெடுப்பு.

17. பாரிஸிலிருந்து 20-வது மைலில் போர்.

### இத்தாலியில்

#### ஜூலை

19. லெக்ஹார்ன் வீழ்ந்தது.

23. பீஸா நகருக்குள் நேசப் படைகள் பிரவேசம்.

# அனாதைக் குழந்தை

[பேரன்]

வெளிப்புறத்திலே ஒரு குழந்தை தவிழ்ந்துகொண்டிருந்தது.

சர்க்கார் வைத்தியன் அந்த வழியாகப் போனான்; ஊரில் எங்கும் கொள்ளை நோய்; இந்தக் குழந்தைக்கும் அந்நோய் போல் இருக்கிறது என்று குழந்தையை வைத்தியசாலைக்கு எடுத்துக் கொண்டு போகலானான்.

வீட்டினுள்ளிருந்து இரண்டு ஸ்திரீகள் கூக்குரலிட்டுக்கொண்டு வெளியே வந்தார்கள், 'என் குழந்தையைக் கொண்டு போகாதே' என்று கதறிக் கொண்டு.

வைத்தியன் சொல்கிறான்: "இது யார் குழந்தை என்பதை நிச்சயஞ் செய்து கொண்டு வாருங்கள். அதுவரை, வைத்திய சாலையிலே இதைக் குணப்படுத்துகிறேன். அங்கே வாருங்கள், உங்கள் சண்டையைத் தீர்த்துக்கொண்டு."

இரண்டு ஸ்திரீகளும் குழந்தையைப் பின் தொடர்ந்தார்கள். "எங்கள் சண்டை ஓயாத சண்டை; இது எங்களுக்குத் தெய்வம் அளித்த குழந்தை; நாங்கள் சேர்ந்து கேட்கிறோம், கொடுத்துவிடு."

"அப்படிச் சொல்லுங்கள். இது அனாதைக் குழந்தைதான் என்று. அனாதை வைத்தியசாலையில் இதைக் குணப்படுத்துகிறேன்; குணமானபின் உங்கள் வழக்கைக் கேட்டு, குழந்தை யாருடையதோ அவளிடம் கொடுக்கிறேன். பாதி வைத்தியத்திலே கொடுக்க மாட்டேன்" என்றான்.

"குழந்தைக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லையே! இன்னும் வைத்தியம் தொடங்கவில்லையே! எங்களைக் காணாமல் குழந்தை ஏங்கிப்போமே! பிழைக்குமோ பிழையாதோ?" என்று பரிதவித்தார்கள், இந்த ஸ்திரீகளோடு வீட்டிற்குள் இருந்த மற்ற ஸ்திரீகளும்.

'நான் என்ன செய்வேன்? சர்க்கார் உத்தரவு' என்றான் அனாதை வைத்தியன்.

---

ஆகஸ்டு

5. பிளாரென்சுக்குள் நேசத் துருப்புகள்.

**கீழ்க் கோடியில்**

ஜூலை

14. ஸோவியத் எல்லைக்கு ஜப்பானியர் புது படை பலம் அனுப்பினர்.

விஷ்ணுபூருக்குத் தெற்கே மணிப்பூர் சமஸ்தானத்துக்குள் ஜப்பானியருடன் போர்.

15. உக்ரூருலுக்குக் கிழக்கே ஜப்பானியர் துரத்தப்பட்டனர்.

19. இம்பால் சமவெளியிலிருந்து ஜப்பானியரை விரட்டுவது பூர்த்தியாயிற்று.

20. குவாம் தீவுகளில் அமெரிக்கத் துருப்புகள் இறங்கின.

22. பலேல் - டாமு பிரதேசத்தில் ஜப்பானியர் எதிர்ப்பு.

24. ஜப்பானுக்குத் தெற்கே மரியானஸ் தொகுதியிலுள்ள டினியானில் ஜாப் துருப்புகள் இறக்குமதி.

27. பலேல் அருகில் ஜாப் வாபஸ்.

ஆகஸ்டு

4. வட பர்மாவில் மியித்கின்யா வீழ்ந்தது.

6. டாமு பிடிபட்டது.

7. பிலிப்பைன்மீது முதல் நேச விமான தாக்குதல்.

10. ஜப்பான் மீது குண்டுவீச்சு.